விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 20 சனிக்கிழமை (06.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 292

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# காணாமல்போனோர் தொடர்பில் இலங்கையின் நடவடிக்கை என்ன?

## இலங்கைப் பிரதிநிதியிடம் நவிபிள்ளை கேள்வி



(ஜெனிவா) இலங்கையில் காணாமல்போன சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் தொடர்பில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை கேள்வி எழுப்பியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## உலக இ.மாநாட்டை இலங்கையில் நடத்த ஐ.நா. முடிவு

2014-ம் ஆண்டில் நடைபெறவுள்ள உலக இளைஞர் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஐநாபொதுச்செயலாளர்பான்கீமூன், இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இவ்இளைஞர் மாநாடானது முதல் தடவையாக ஆசிய நாடொன்றில் நடைபெறவுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (ந-11)

## மூதூர் கொலை தொடர்பில் உரிய விசாரணை அவசியம்

### ஏ.சி.எப் மீண்டும் வலியுறுத்தல்

மூதூர் தன்னார்வ தொண்டர் படுகொலை சம்பவம் குறித்து உரிய முறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என பிரான்சின் ஏசிஎப் தொண்டுநிறுவனம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

2006ஆம் ஆண்டில் மூதூரில் எக்சன் ஏகேன்ஸ்ட் அங்கர் என்னும் அமைப்பைச் சேர்ந்த 17 தன்னார்வத் தொண்டர்கள் கொலை செய்யப்பட்டனர்.

இந்தக் குற்றச் (20ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை தொடர்பில் இன்று பேச்சுவார்த்தை

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் இன்று முக்கிய பேச்சுவார்த்தையொன்று நடைபெறவுள்ளது.


அமைச்சர் பசில் ராஜபக்ஷ, எஸ்.பி.திசாநாயக்க, நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆகியோர் பங்கேற்கும் இந்தப் பேச்சுவார்த்தையில் தீர்க்கமான முடிபொன்று எட்டப்படுமென உயர் (20ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் குறித்து பங்களாதேஷ் அதிருப்தி

கொழும்பிலுள்ள பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலயம் நேற்று முன்தினம் தாக்கப்பட்டமை தொடர்பில் வெளிவிவகார அமைச்சிடம் பங்களாதேஷ் அதிருப்தி வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த பிக்குகள் தலைமையிலான இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலயத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். (20ஆம் பக்கம் பார்க்க)

# மினிபஸ் -தனியார் பேருந்து விபத்து மூவர் பலி; பயணிகள் பலர் படுகாயம்




## இருபாலையில் சோகம்

(யாழ்ப்பாணம்)

பயணிகளுடன் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினி பஸ், இருபாலைச் சந்திக்கு அண்மையில் தனியார் பேருந்து ஒன்றுடன் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் சம்பவ இடத்திலேயே பலியானதோடு ;ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்ட பின்பு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

மற்றும் பலர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கோரவிபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் இருபாலைச் சந்திக்கு அண்மையில்(கற்பக விநாயகர் கோவிலுக்கு அண்மையில்) பருத்தித்துறையில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினிபஸ் (851), தங்காலை – யாழ்ப்பாணம் பயணத்தில் ஈடுபடும்(நேற்று அது குறித்த பயணத்தில் ஈடுபடவில்லை) தனியார் பேருந்துடன் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானது.

பகல் 12.20 மணியளவில் (20ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தைக் கவிழ்க்க எதிரணியில் இணையுங்கள்

## சரத்திற்கு மனோ அழைப்பு

ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவை, எமது எதிரணி கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுமாறு நாம் அழைத்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய சமவுடமைக் கட்சி, நவசமசமாஜக் கட்சி ஆகிய பல்வேறு கட்சிகள் உள்ளடங்கும் எதிரணி கூட்டமைப்பில் அவரது கட்சியையும் இணைத்துக் கொண்டு இந்த அரசாங்கத்தை வீழ்த்தும் பொதுப் போராட்டத்தை முன்னெடுப்போம் என நான் சரத் பொன்சேகாவுக்கு கூறியுள்ளேன் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தாம் அமைக்கவுள்ள எதிர்க் கட்சிக் கூட்டணியில், ஜனநாயக மக்கள் முன்னணியும் இணையவேண்டும் என மனோ கணேசனுக்கு, சரத் பொன்சேகா அழைப்பு விடுத்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தி தொடர்பில், கருத்துத் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

எதிர்வரும் (20ஆம் பக்கம் பார்க்க)

# திருநெல்வேலியில் காணியை சுவீகரிக்க இராணுவம் முயற்சி

## அடாத்தாக நேற்று நடந்துகொண்டது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பாற்பண்ணைக்கு முன்னாலுள்ள காணியினை இராணுவம் தனது அடாவடித்தனம் மூலம் கைப்பற்றி வைத்து ள்ளது.

திருநெல்வேலி பாற்பண்ணைக்கு முன்னுள்ள நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான 5.5 பரப்புக் காணியினையே இராணுவம் தன்னுடைய காணி என நீண்டகாலமாக சொந்தம் கொண்டாடி வந்துள்ளது.

இவ் இழுபறி நிலையானது ஒரு வருட காலத்திற்கும் மேலாக நீடித்து வந்த நிலையில் இராணுவத்தினர் அண்மைக்காலங்களில் குறித்த காணி தொடர்பில் தன்னிச்சையான முடிபுகளை எடுத்து வந்திருந்தனர்.

பல தடவை குறித்த காணிக்கு பாதுகாவலராக இருந்து வந்தவரை இராணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளனர்.

இதில் இராணுவத்தினரின் உச்சக்கட்ட அடாவடித்தனமாக நேற்று முன்தினம் அதிகாலை குறித்த காணிக்கு 5 இராணு வத்தினர் சென்று அங்கிருந்த காவலாளியை அச்சுறுத்தியுள்ளனர்.

பின்னர் நேற்றுக் (20ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் பாக். வேவுதளம் விரைகிறது இந்தியக் குழு

யாழ்ப்பாணத்தில் இந்தியாவை வேவு பார்ப்பதற்காக பாகிஸ்தான் வேவு தளம் அமைத்துள்ளதாக கூறப்படுவது பற்றி விசாரணை நடத்த இந்தியக் குழு இலங்கைக்கு வர இருக்கின்றது.

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் இந்தியாவுக்கு எதிரான உளவு வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும், பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளே உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐக்கு நேரடியாக தகவல்களை பரிமாறுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இதனை உறுதிப்படுத்தும் விதமாக தமிழகத்தில் தமீம் அன்சாரி என்பவர் கைது செய்யப்பட்டார். (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்மை தரக்கூடிய விடயங்களிற்கு த.தே.கூ. ஆதரவளிக்க வேண்டும்-பசில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு நன்மை தரும் விடயங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும். தவிர அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் விமர்சிக்கக் கூடாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் 15-வது பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

பத்திரமுல்லையிலுள்ள அகில இலங்கை சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற இம் மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

அரசாங்கம் முன்வைத்துள்ள திவிநெகும சட்டமூலத்தை பற்றி பூரண அறிவைப் பெற்றிராதவர்கள் ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும், இந்த திட்டத்தினையும் எதிர்த்து வருகின்றனர். இந்த திவிநெகும சட்டமூலத்தில் சமுர்த்தி அதிகார சபையும் உள்வாங்கப்பட்டுள்ளது.

திவிநெகுமதிணைக்களம் அமைப்பதன் மூலம் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் பெறும் அனைத்து சலுகைகளையும் நன்மைகளையும் பெற்றுக் கொள்வார்கள். இதன்மூலம் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நிரந்தர ஓய்வூதிய உத்தியோகத்தர்களாக மாறுகின்றனர்.

இந்த திவிநெகும திணைக்களத்தின் மூலம் வறிய மக்கள் நன்மைபெறக்கூடிய அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2005, 2010 ஆம் ஆண்டுகளினுடைய மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்திதிட்டம் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனூடாக மக்கள் சிறந்த பயன்களை அடைந்து வருகின்றனர். ஆனால் இன்று நல்லவற்றையும் தீயவைகளாக எதிர்த்து வரும் சில தீய சக்திகள் இந்த நன்மையளிக்கக் கூடிய திவிநெகும திட்டத்தினை எதிர்த்ததன் காரணமாக இந்தச் சட்டமூலம் நிறைவேற்றம் சற்று பின்தள்ளப்பட்டுள்ளது.

எனினும் இந்த திவிநெகும சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கு இலங்கையிலுள்ள அனைத்து மாகாண சபைகளும் முழு ஆதரவினை வழங்கியுள்ளன.

இதனால் மிக விரைவில் இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பொது மக்களும் நன்மை பெறுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் சங்கத்தின் தலைவர் கித்சிறி கமகே, பொதுச் செயலாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான எஸ்.ஏ.டி. ஜகத்குமார் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ந-11)


**ஸ்ரீவித்தியா குருகுலம்**

வழங்கும், ஆசிரியர் முத்துலிங்கத்தின்

**'EASY ENGLISH'**

புதிய வகுப்புகள் : சனி 6-10-2012

விபரங்கள் + பெயர் பதிவு : 773 212 711 மூலம்



**செல்லா சினிமா- யாழ்ப்பாணம்**



விஜய் இயக்கத்தில்
சியான் விக்ரம், அனுஷ்கா,
எமி ஜக்சன், சந்தானம்
மற்றும் பலர் நடிப்பில்

**தாண்டவம்**

D.T.S

10.30, 2.30, 6.30, 9.30



**ஓராண்டு நினைவஞ்சலி**

**அமரர் தருமலிங்கம் ஜெயேந்திரா (குட்டி)**



உள்ளதை உள்ளபடி உரைத்தாய்
ஊரோடு ஒற்றுமையில் திகழ்ந்தாய்
கள்ளமிலா கதைகள் பல சொல்வாய்
வெல்லமென உன்நினைவு நெஞ்சில்
வேகின்ற வேதனையை நீ அறியாய்!
செல்லக் குட்டியனே எங்கள் அன்பின்
செல்வமே!

தோற்றம் : 30.03.1974
மறைவு: 18.09.2011

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், அப்பா, அம்மா,
சகோதரர்கள்.
ஏவிளை வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(578)



**குறைந்த கட்டணத்திலான பொதிகள் சேவைகள்**



உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு உணவு, உடை, அலங்காரப் பொருட்கள், ஆவணங்கள், கடிதங்கள், CD ஆகியவற்றை அனுப்பலாம்.

சுவிஸ் - 1kg - 600/-
கனடா - 1kg - 700/-
லண்டன் - 1kg - 600/-
} 5 நாட்களில் ஒப்படைக்கப்படும். 3 கிலோவுக்கு மேல் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

அவுஸ்திரேலியா - 1kg - 1000/-
ஜேர்மனி - 1kg - 1000/-
} 5 கிலோவிற்கு மேல் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

அத்துடன் ஏனைய ஐரோப்பிய மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் குறைந்த கட்டணத்தில் எமது சேவைகளை பெற்றுக் கொள்ளலாம்.

வாடிக்கையாளரின் நன்மைகருதி உங்கள் பிரதேசங்களில் உங்களிடம் நன்மதிப்பை பெற்ற பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் உங்கள் பொதிகளை ஒப்படைக்கலாம்.

நெல்லியடி - மருதம் கொம்னிக்கேசன் 0212263210
அச்சுவேலி - லிபேட்டி கொம்னிக்கேசன் 0217451245
பருத்தித்துறை - LANDMARK புத்தகசாலை 0750389869
வல்வெட்டித்துறை - V2 TRAVELS and TOURS 0212055044
கோண்டாவில் - பாரதி கொம் - 0212225148
உரும்பிராய் - அருள்விநாயகர் கொம்னிக்கேசன் 0212230623
சுன்னாகம் - TECH ELECTRONICS - 0214916263
சங்கானை - திருமகள் தொலைத்தொடர்பு - 0212250061
பண்டத்தரிப்பு - Funcity - 0217429390
வேலணை - SKR கொம்னிக்கேசன் - 0217390360
சாவகச்சேரி - S.நிலமறங்கன் - 0212270231
ஆனைக்கோட்டை - புவன மல்ரி சென்ரர் - 0779194171



மேற்குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் எமது ஸ்தாபனத்துடன் இணைந்து இவ் சேவையை செய்கின்றன. உங்கள் பொதிகளை அவர்களிடமும் ஒப்படைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**RAINBOW TRAVELS**

இல.30/2, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலையம் வீதி, யாழ்ப்பாணம்.

Tel:-0212219596

(சி-1228)



**பாராட்டி வாழ்த்துகிறோம்**



**உயர்திரு. மா.ராஜ்குமார்**

உயர்திரு. மா.ராஜ்குமார் அவர்கள் முல்லை வலயக் கல்விப் பணிப்பாளராக 02.10.2012ஆம் நாள் கடமை ஏற்றுள்ளார். அவரை மேலும் புகழ்பூக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.



செம்மலையின் செங்கதிராய்!
முல்லை சிப்பிக்குள் முத்தாய்!
வந்துதித்த எங்கள் கல்விமானே!
முல்லை வலயக் கல்விப் பணிப்பாளராய்!
முற்றும் குறை நீக்கி நிறை செய்வாய்!
தம் பணியை கிளை பரப்பி!
ஆல் போல் நிழல் பரப்பி!
மேன்மேலும் பல உயர்வுகள் பெற்று!
நீடுழி வாழ மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
மு/முல்லைத்தீவு இந்து வித்தியாலயம்

தகவல் : சி.பாலசிங்கம்
முள்ளியவளை.

(சி-1224)


## பிரதேச சபை, நல்லூர்
## பொது மக்களுக்கான முக்கிய அறிவித்தல்கள்

01. சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டிடமும் அமைக்கப்பட்டாலும் அல்லது ஒப்பந்தங்களை மீறி அமைக்கப்பட்டாலும் சட்ட நடவடிக்கை மூலம் அவை அகற்றப்படும்.
02. வியாபார உரிமம் இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாகச் சபையுடன் தொடர்பு கொண்டு அனுமதியினை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வியாபார உரிமம் பெற்றவர்கள் அதை வியாபார நிலையங்களில் பார்வைக்காக வைக்கப்படவேண்டும்.
03. சபைக்குச் சொந்தமான கடை உரிமையாளர்கள் வாடகையினைச் செலுத்தாவிடின் உடனடியாக அதனை செலுத்தப்படவேண்டும். தவறின் சபையினால் மீளவும் கடைகள் பாரமெடுக்கப்படும்.
04. சபையின் கடைகள் சம்பந்தமாக மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. இதுவரை மீளாய்வு செய்யாத சபையின் குத்தகைக் கடைக்காரர் ஒரு கிழமைக்குள் சபைக்கு சமுகமளிக்க வேண்டும் தவறின் சபையினால் மீளவும் கடைகள் பாரமெடுக்கப்படும்.
05. மூன்று மாதங்களுக்கு மேலாக பூட்டப்பட்டுள்ள சபையின் கடைகள் யாவும் எதுவித முன்னறிவித்தலுமின்றி சபையினால் பாரமெடுக்கப்படும்.
06. நடைபாதைகளை தடை செய்யும் வகையில் நடந்து கொள்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். கடைகளின் எல்லைப் பரப்பினை மீறி பொருட்களை வைத்து வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. நடைபாதையில் வைத்து வியாபாரம் செய்யப்படும் பொருட்கள் யாவும் சபையினால் பறிமுதல் செய்யப்படும்.
07. சுகாதாரத்தை பேணி நடப்பது மக்களின் கடமையாகும். சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுரைகளுக்கு மாறாக நடந்து கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அன்பான பிரதேச வாழ் மக்களே மேற் கூறப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் நடந்து கொண்டு சபையின் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும்படி தங்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர் : நல்லூர் பிரதேச சபை

(சி-1227)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பறவைகள்

நாமெல்லாம் புதிதாக ஒரு இடத்திற்குப் போனால் ஒவ்வொரு சந்தியாக நின்று வழி கேட்டுக்கொண்டு போவோம். விபரம் எல்லாம் குறித்து கைப்பையிலே வைத்துக் கொள்ளுவோம். இப்படியெல்லாம் ஆயத்தமாக வைத்திருந்தும் கூட கடைசியிலே செல்லும் இடத்திற்கு வழி தெரியாமல் ஒரு ''முச்சக்கர வண்டி''யைப் பிடித்துத் திரும்பி வீட்டிற்கு வந்த மாதிரி ஆகிவிடும்.

ஆனால், பறவைகள் இருக்கிறதே அவைகளுக்கெல்லாம் அபாரமான சாமர்த்தியம்.

யாரிடமும் வழி கேட்காமல் எவ்வளவு தூரம் பறக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் பறந்து சென்று தமது வேலைகளை கெட்டியாக முடித்து விட்டு வந்து விடும்.

ஆகாய விமானம் கூட தொடர்ந்து பறப்பதில்லை. அடிக்கடி தரையில் இறங்கி அதற்கு வேண்டியதை நிரப்பிக் கொண்டுதான் புறப்பட்டு போகிறது.

ஆனால், சில பறவைகள் இடைவிடாமல் 24 ஆயிரம் மைல் கூட பறந்து போகிறது.

இப் பறவைகளுக்கு எல்லாம் பெரிய கருவியோ, பெற்றோலோ தேவையில்லை. அவைகள் நினைத்தபடி போய் வருகின்றன.

அதுவும் வருடத்திற்கு இரு தடவை கூட இப்படி போய் விட்டு வருகிறது.

ஆர்க்டிக்டெர்ன் (Arctictern) என்றொரு பறவையினம் உள்ளது. ஒவ்வொரு வருடமும் வடபகுதிக்கு வருகிறது. முட்டையிட்டு வருவதற்காகத்தான் இவ்வாறு தனது வட பகுதி பயணத்தை அது மேற்கொள்கிறது.

குளிர்காலம் ஆரம்பித்தவுடன் தெற்கே உள்ள கடல் பகுதிக்கு அது திரும்பி வந்து விடும்.

ஜெட் விமானத்தை விட அது வேமாகப் பறக்கும் தன்மை கொண்டது.

இப்படியாக பல பறவைகள் வேறு இடங்களுக்குச் சென்று முட்டையிட்டு வருகிறது.

ஆனால், இவைகள் எல்லாம் யாரிடமும் வழி கேட்காமல் அவ்வளவு தூரம் பறந்து சென்று மீண்டும் தமது இருப்பிடத்தை வந்தடைகிறது. அதுதான் ஆச்சரியம்.

புறாக்களின் தலையிலேயும் ''மாக்னடைட்'' என்ற பொருள் இருக்கிறது. இதன் உதவியால் உலகத்தில் வட துருவம் எது? தென் துருவம் எது? என்பதை புரிந்து கொள்கிறது.

சில பறவைகள் இரவில் பறந்து செல்வதில்லை. அவையெல்லாம் நட்சத்திரத்தை பார்த்து திசையைக் கண்டு பிடிக்கிறது.

ஒரு மனிதனை எந்தவிதமான கருவியின் உதவியுமின்றி ஒரு பாலைவனத்தில் நடக்க விடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அவன் நடக்க ஆரம்பித்தால் சுற்றி சுற்றி கடைசியிலே புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்து விடுவான்.

ஆனால், பெண்குயின் பறவைகள் பாலைவனத்திலே 30 மைல் வரைக்கும் ஒரே நேர்கோட்டிலே போனதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள்.

அதனாலே மனிதனுக்கே வழிகாட்டுகிற தகுதி பறவைகளுக்கு இருக்கிறது என்று சொன்னால்– அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

முன்பெல்லாம் தபால் நிலையம் இல்லாத காலத்தில் கடிதங்களையெல்லாம் புறாவின் காலிலேயே கட்டித்தான் அனுப்பியுள்ளார்கள். அது சரியாகப் போய் கடிதத்தை உரியவர்களிடம் கொடுத்து விட்டு வந்து விடும்.

பூமியின் காந்த சக்தி– ஒளி பரவி இருக்கும் விதம்– நீண்ட தூரத்திலே இருந்து நகரும் சக்தி– இவைதான் அதற்குக் காரணமாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கட்சி முரண்பாட்டால் தவிக்கிறது வலி.தெற்கு மேற்கு பிரதேச சபை

## சேவையைப் பெறுவதில் மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்களிடையேயான முரண்பாட்டால் கட்டட அனுமதிக்கு விண்ணப்பித்த பொதுமக்கள் பல மாதங்களாக அலைந்து திரிவதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த சபை பொறுப்பேற்று சுமார் ஒரு வருடங்களுக்கு மேலாகின்ற போதும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு எந்தவித அபிவிருத்திப்பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்தச் சபையின் தவிசாளரினால் ஏதாவது திட்ட முன்மொழிவுப் பிரேரணைகள் மாதாந்த பொதுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டால் அதனை முதலில் எதிர்ப்பவர்கள் ஆளும் கட்சி உறுப்பினர்களே. அதேபோன்று தவிசாளரை பதவியைவிட்டு இறக்க வேண்டும் என நினைக்கும் ஏனைய ஆளும்கட்சி உறுப்பினர்கள் ஏதாவதுதிட்ட முன்மொழிவுகளைகொண்டு வந்தால் தவிசாளர் அதற்கு உடன்படமாட்டார்.

ஆளும்கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்படுவதை கட்சி மோதலாக கருதினாலும் தமது கட்சிக்குள்ளேயே அடிபட்டுக் கொள்ளும் இவர்களினால் வாக்களித்த மக்களுக்கு எந்த விதத்திலும் பயனில்லை.

அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்வதை விடுத்து நலன் சார் திட்டங்களையும் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவையினையும் குறித்த பிரதேச சபை உறுப்பினர்கள் புறந்தள்ளி விடுகின்றனர்.

தேர்தல் காலங்களில் வாக்குகளைப் பெறுவதற்கு மக்களை நாடிச் செல்லும் கட்சிகளின் உயர்பீடத்தினர் ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு மக்களின் நலனில் அக்கறை கொள்ளாதது வேதனைக்குரியது.

நீண்டகால அழிவுக்குப்பின்பு பல எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் மக்களுக்கு இவ்வாறான மக்கள் பிரதிநிதிகளினால் பயன் எதுவும் கிடைக்கப்போவதில்லை.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையிடம் சுமார் 25 இற்கும் மேற்பட்ட கட்டட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதில் பல விண்ணப்பங்கள் கட்டடங்கள் கட்டப்பட்டு பிரதேச சபையினால் அனுமதி எடுத்து கட்டுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்து அனுமதிக்காக விண்ணப்பிக்கப்பட்டவை.

பிரதேச சபையிடம் கட்டட அனுமதியைப் பெற மக்கள் அலைந்து திரிவதை தடுக்கும் பொருட்டும் விரைவாக அந்த அனுமதிகளை வழங்கும் பொருட்டும் அண்மையில் கட்டட உபகுழு ஒன்று உருவாக்கப்பட்டது.

குறித்த கட்டட உபகுழு அமைப்பதும் பெரும் சச்சரவுக்கு மத்தியிலேயே இடம் பெற்றது. இருப்பினும் குறித்த குழுவை அமைப்பதற்கான அங்கீகாரம் பெறும் பொருட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதிக்காக அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதுவரை அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. இந்தக் குழுவிற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்றால் கட்டட அனுமதிக்காக சமர்ப்பித்த மக்கள் எத்தனை நாட்கள் அலைந்து திரிய வேண்டுமோ தெரியவில்லை. இந்நிலையில் முரண்பாடுகளை தீர்ப்பதற்கு உயர் மட்டக் குழு அமைக்க வேண்டுமென இச் சபையிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பொதுச் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ–6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 40 | 70 | 40 | 60 |
| தக்காளி | 35 | 30 | 20-25 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 30 | 40 |
| கோவா | 45 | 55 | 50 | 70 |
| கரட் | 80 | 80 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 30 | 50 |
| புடோல் | 45 | 60 | -- | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 25-30 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 50 | 50 | 50 | 65 |
| பாகற்காய் | 90 | 80 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 45-50 | 75 |
| பயற்றங்காய் | 70 | 50 | 30 | 90 |
| லீக்ஸ் | 90 | 90 | 80 | 100 |
| பீற்றூட் | 45 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 65 | 80 | 60 | 120 |
| முருங்கைக்காய் | 45 | 50 | 40 | 40 |
| போஞ்சி | 90 | 110 | 80 | 160 |
| கத்தரிதம்புள்ள | 70 | 100 | -- | -- |
| கீரை – 1 பிடி | 10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 280 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 | 25-35 | 27-30 |

# இராசி பலன்

06.10.2012
(புரட்டாதி 20, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 7.25 மணிவரை
மிருகசீரிடம் முழுவதும்
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
கபில சஷ்டி விரதம்

**மேடம்** நினைத்தகாரியத்தை முடித்து நிம்மதி காணும் நாள், அடிப்படை வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, சயனசுகமுண்டு, குடும்பப் பொறுப்புக்கள் கூடும், உடல்நலம் சீராகும்.

**மிதுனம்** எடுத்தகாரியங்கள் தாமதமாகும், இடமாற்றம், ஊர்மாற்றம் என்பன இடம்பெறலாம், செலவுகள் அதிகமாகும், யாராவது ஏதாவது உதவிகள் கேட்டு வரலாம்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார முன்னேற்றம் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், குடும்பப் பொறுப்புக்களில் தாராளம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு

**கன்னி** தேவையற்ற சிந்தனைகள் அதிகமாகும், எதிர்பாராத வகையில் பயணங்கள் ஏற்படலாம், தந்தை வழி உறவில் அனுகூலமுண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்

**துலாம்** பயணங்களின் போது விழிப்புணர்வு தேவை, குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கூறலாம், போசனசுகமுண்டு, அமைதிக்குறைவான நாள்.

**விருச்சிகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், எடுத்தகாரியங்கள் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**தனுசு** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், சுவாரஸ்யமான நாள், செய்தொழிலில் விருத்தியுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும், தன்னம்பிக்கை அதிகரிக்கும்


**மகரம்** வியாபாரத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் அதிகபிரயாசை காட்டுவீர்கள்.

**மீனம்** சகோதர ஒற்றுமை பலப்படும், எடுத்தகாரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், வருமானம் திருப்திதரும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நன்றி: ஐலன்ட்

# வீதி அகலிப்பின் போது உடைக்கப்படும் மதில்கள் தரமாக அமைவதில்லை

## பாதிக்கப்பட்டோர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளின் போது சுவீகரிக்கப்படும் தனியார் காணிகளுக்கு நட்டஈடு வழங்கப்படுவதில்லை என பருத்தித்துறை வீதி அகலிப்பின் போது பாதிக்கப்பட்டவர்களால் யாழ்.பிராந்திய மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாட்டில் தேவைக்கு அதிகமான அளவுடைய காணி சுவீகரிக்கப்படுவதாகவும் அவ்வாறு சுவீகரிக்கப்பட்டு உடைக்கப்பட்ட மதில்கள் மீண்டும் கட்டப்படும்போது அவை தரமற்றவையாக காணப்படுவதாகவும் அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி அகலிப்பாளர்களால் கட்டித்தரப்படும் மதில்கள் தரமற்றவை என்பதுடன் காற்பரப்பு காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் தமது முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக யாழ்.மனிதவுரிமை இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களின் காணி அபகரிக்கப்படும் போது அதற்கான நட்டஈட்டினை வழங்க வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும்.

இதனைவிட உடைக்கப்பட்ட மதில்கள் மீள அமைக்கப்படும் போது அவை தரமானதா என அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறான பிரச்சினைகள் தென்பகுதியில் மிகக் குறைவாக உள்ளபோதும் வடக்கில் அதிகரித்து காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-4)

# வட இலங்கை சங்கீதசபை தேர்வுக்கு விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபைத்தேர்வு 2013 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சார்த்திகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வட இலங்கை சங்கீத சபைத்தலைவர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையானது வாய்ப்பாட்டு, வீணை, வய லின், புல்லாங்குழல், நாதஸ்வரம், தவில், கார் மோனியம், பரதம், கதகளி, மிருதங்கம், பண் ணிசை, நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கு பரீட்சை நடைபெறவுள்ளது.

தரம் 1 தொடக்கம் தரம் 6 வரையான பரீட்சார்த்திகளுக்கான செய்முறை தேர்வு எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பாடசாலை விடுமுறை நாட்களில் நடைபெறவுள்ளது.

அறிமுக தேர்வு தரம் 1 தவிர்ந்த ஏனைய தரத்திற்கு எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தில் வரும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பபடிவங்கள் யாவும் கடந்த முதலாம் திகதியில் இருந்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள விரும்புவோர் தலைவர், வட இலங்கை சங்கீத சபை, வலயக்கல்வி அலுவலகம், நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ அல்லது 021 222 9719 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-3-15)




# தேசிய மட்டத்தில் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

கொழும்பு றோயல் கல்லூரியினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட இவ் ஆண்டுக்கான நாடகத்திறன்காண் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் தவராசா சண்முகப்பிரியன் நாடகப் பிரதியாக்கப்போட்டியில் தேசிய ரீதியில் வெற்றிபெற்று வேத்தியல் விருதினைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்ற நாடகத்திறன்காண் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் தேசிய ரீதியில் முதல் தடவையாக வெற்றி பெற்றுள்ளார்.

விருதினை பெற்றுக்கொண்ட சண்முகப்பிரியனுக்கான வழிப்படுத்தலினை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாடக மன்ற பொறுப்பாசிரியர் எஸ்.ரி.குமரன் மேற் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# கீரிமலை பிரதேசத்தில் மதுப்பிரியர்கள் அடாவடி

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தை அண்டிய சூழலில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இப்புனித பிரதேசத்தில் பொலிஸாரும் கடற்படையினரும் காவல் கடமையில் இருக்கின்ற நிலையிலும் இவ்வாறான இழிநிலை செயல்கள் நடைபெறுவது வருத்தமளிப்பதாக ஆலய வளாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

இவ்வாலயத்திற்கு வருகைதரும் உல்லாசப் பயணிகள் மது அருந்திவிட்டு வெற்றுப் போத்தல், பியர் பேணிகள் ஆகியவற்றை அருகில் காணப்படும் சிதைவடைந்த சிறாப்பர் மடத்தில் எறிந்து விட்டு செல்வதாக் குறிப்பிடப்படுகிறது.

தற்போது மழைகாலம் அண்மித்துள்ள நிலையில் பியர் வெற்றுப் பேணிகள், போத்தல்களில் மழைநீர் தேங்கி நின்று டெங்கு பரவும் அபாயநிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, உரிய உயரதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து இப்பிரதேசத்தின் தூய்மையைப்பேண உதவுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2)

# ஆசிரியர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யா/அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்தின விழா இன்று நண்பகல் 12 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் மாணவ தலைவன் பே.புவனநாத் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமை கற்கை வணிக பீடாதிபதி கலாநிதி பேராசிரியர் தி.வேல்நம்பி, கௌரவ விருந்தினராக ஆசிரியையும் பாடசாலை பழைய மாணவியுமான ஜெ.சண்முகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். வாழ்த்துரையை வித்தியாலய முதல்வர் அருந்தவநேசன் வழங்குவார். (அ)

*******

யா/மத்திய கல்லூரியின் ஆசிரியர் தினநிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு அப்பாடசாலையின் திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.கோட்டக்கல்வி பணிப்பாளர் ரி.எஸ். சண்முககுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ)

*******

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சர்வதேச ஆசிரியர் தினமும் கௌரவிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் பணிப்பாளர் தேசகீர்த்தி லயன். எந்திரி மோசஸ் மரியதாசன், திருமதி சாந்தகுமாரி மரியதாசன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் சின்மய மிசன் ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கல்லூரியின் கலாசார மன்றம் இந்த விழாவை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருவதாக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (அ-9)

*******

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் கொண்டாடப்படும் ஆசிரியர் தினநிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் பதில் மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-29)

*******

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் மாணவர்களும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டு ஆசிரியர்களை வாழ்த்தி கௌரவிக்கவுள்ளனர். (அ-3-29)





உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு உரும்பிராய் இரத்ததான கழகத்தின் அனுசரணையுடன் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அதிபர் அ.அருணந்திசிவத்தின் ஒத்துழைப்புடன் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நேற்று இரத்ததானம் வழங்கினர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வேண்டுகோளுக்கு அமைவாக இக்கல்லூரி மாணவர்கள் உயிர்காக்கும் உன்னத கொடையான இரத்ததானம் வழங்கினர். இந்நிகழ்வில் உரும்பிராய் இரத்ததான கழகத்தின் உறுப்பினர் டாக்டர் வி.கணேசவேல் உள்ளிட்டோர் இந்த இரத்ததான நிகழ்வில் பங்கு கொண்டிருந்ததை படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெக்னட் காட்களுடன் இளைஞர் கைதானார்

(கொழும்பு)

வங்கிக்கணக்குகள் தொடர்பான தகவல்களைத் திரட்டக்கூடிய இயந்திரம், மடிக்கணனி மற்றும் கடனட்டைகள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மெக்னட் காட்கள் 110 ஆகியற்றுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த இளைஞர் ஒருவரை விமான நிலைய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கான இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட 26 வயதான மேற்படி இளைஞன் வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் இவர் சென்னையிலிருந்து இலங்கை வந்தடைந்த போதே கைது செய்யப்பட்டார் என்றும் விமான நிலைய அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞனை மேலதி விசாரணைகளுக்காக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக மேற்படி அதிகாரிகள் மேலும் கூறினர். (அ-2)

# ஐக்கிய நாடுகள் சபையின் துணைச்செயலர் யாழ். வருகை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலாளர் நாயகமும் யு.என்.டி.பியின் பிராந்தியப் பணிப்பாளருமான அஜய் சிப்பர் உள்ளிட்ட குழுவினர் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு இன்று காலை 9 மணியளவில் வருகை தரும் அஜய் சிப்பர் மற்றும் இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி சுபைனோ நண்டி உள்ளிட்ட குழுவினர் பலாலி படைத்தலைமையகத்தில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்கவினை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இதன் பின்பு முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாவட்ட மனிதவுரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளை இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் காரியாலயத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளதோடு யாழ். மாவட்ட செயலகத்தில் யழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாய கம் தலைமையிலான மாவட்ட செயலக அதிகாரிகளை நண்பகல் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இதன் பின்பு யாழிலுள்ள ஐ.நா. அலுவலத்தில் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ள இந்தக் குழுவினர் யு. என். டி.பியின் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கைக்கு கடந்த 3 ஆம் திகதி வருகை தந்த இந்தக் குழுவினர் பலதரப்பட்டவர்களுடன் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர்.

இதேவேளை, கடந்த மாத முற்பகுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளையின் அலுவலக அதிகாரிகள் இலங்கையின் நிலைமைகள் குறித் து ஆராய்ந்து சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# விவசாய துறையை மேம்படுத்த ஐந்து இலட்சம் அமெ.டொலர்

## ஒதுக்கியது ஆசிய அபிவிருத்தி வங்கி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விவசாய துறையை மேம்படுத்துவதற்கு ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் வகையில் இந்த செயற்றிட்டம் முன்னடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தின் ஏழு பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 700 விவசாயக் குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள், மரக் கன்றுகள் மற்றும் விதை நெல் ஆகியன விநியோகிக்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித் துள்ளது.

இதனைத் தவிர மேலதிக பயிர்ச்செய்கையாக கச்சான், சின்ன வெங்காயம், மிளகாய், உழுந்து, பாசிப்பயறு, சோளம் ஆகியவற்றை செய்கையிடுவதற்கான உதவிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அருள் மாதா திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)



இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அருள் மாதா ஆலய கொடியேற்றம் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்தில் தினமும் மாலை 5 மணிக்கு திருசெபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படுகிறது.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு திருச்செபமாலை ஆரம்பமாகி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நற்கருணை ஆராதனை இடம்பெறும்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 5மணிக்கு திருவிழா திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுருப ஆசீர்வாதமும் இடம்பெறும். (அ-2)

# மெனிக்பாம் முகாம் மூடப்பட்டமைக்கு அரசாங்கத்திடம் உள்நோக்கம் உண்டு

## சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் படையினர் நிலை கொண்டுள்ள போதும் அதனை இலங்கை அரசாங்கம் மூடி மறைக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை தொடர்பான மீளாய்வுகள் நடைபெறவுள்ள நிலையில் இலங்கையில் இடம்பெயர்ந்தவர்கள் இல்லை எனக் காட்டுவதற்கே மெனிக்பாம் முகாமிலிருந்த தமிழர்களைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் காடுகளுக்குள் தள்ளி விட்டுள்ளார். இதனூடாக இடம்யெர்ந்தோரை மீள்குடியமர்த்திவிட்டோம் என சர்வதேசத்தினை இலங்கை அரசாங்கம் ஏமாற்றியுள்ளது. இதனை உலக நாடுகள் நன்கு புரிந்து கொள்ள வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் வலி. வடக்குப் பிரதேசத்தில் 24 கிராமஅலுவலர் பிரிவுகளில் இருந்து கடந்த 25 வருடங்களாக இடம்பெயர்ந்து முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர். இம்மக்கள் தங்கியுள்ள முகாம்கள் தனியாருடைய காணிகளிலுள்ளன.

முல்லைத்தீவில் தற்போது கேப்பாப்பிலவு மக்களைக் காட்டுக்குள் வைத்திருக்கின்றனர். இம்மக்களது குடியிருப்புக் காணிகள் , வயல் காணிகள் என எல்லாவற்றையும் இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. அதுபோல கிளிநொச்சி நகரிலும் பரவிப்பாஞ்சான் கிராமம் முழுமையாக இராணுவப் பிரிகேட் பிரிவுக்காக அபகரிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள காணி நிலம், வீடுகளை மக்களிடம் ஒப்படைக்காது தமது கட்டுப்பாட்டுக்குள் இராணுவத்தினர் வைத்திருக்கின்றனர்.

அமெரிக்காவோ இந்தியாவோ அல்லது வேறு நாடுகளோ கூறியதால் இராணுவத்தைக் குறைத்து விட்டோம். இராணுவம் இல்லையென கூறுவது பொய்யாகும்.


ஆகவே இங்கு சாதாரண சூழல் ஒன்றை உருவாக்குவது மிகவும் கடினம். இராணுவம் யாழ்ப்பாணத்தில் சாதாரண நிலை வந்து விட்டது. மக்களைச் சென்று பார்க்கலாம். ஜனநாயகச் சூழல் வந்து விட்டது என்று பொய்யான தகவலைக் கூறி உலகத்தை ஏமாற்றுகிறது. ஆகவே சுமுகமான சூழல் இங்கு இல்லை என்பதே எனது கருத்தாகும் என அவர் குறிப்பிட்டார். (அ-2)

# நவக்கிரக ஹோமம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் நவக்கிரக ஹோமம், அபிஷேகம் என்பன இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (அ-9)











பூநகரி கலாசாரப் பேரவையினால் நடத்தப்பட்ட 2 ஆவது கலைவிழா நேற்று முன் தினம் காலை பூநகரி வாடியடி கோட்டை மைதானத்தில் அமைந்துள்ள வைத்திலிங்கம் அரங்கில் நடைபெற்றது. இந் நிகழ் விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு ஆராத்தியெடுக்கப்படுவதையும் "பூந்துணர் சஞ்சிகை - 2" வெளியீடு இடம்பெற்றதையும் பூநகரி பிரதேசத்தில் கலைத்துறைக்காற்றிய சேவைக்காக பொன்னாடை போர்த்தி "கலைநகரி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதையும் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடுகளை தீர்ப்பதற்கு உயர்மட்டக்குழுவை அமையுங்கள்

## கூட்டமைப்பிடம் தவிசாளர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றத்தின் சில சபைகளுக்குள் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான உயர்மட்டக்குழு அமைக்குமாறு கோரி யாழ்.மாவட்ட பிரதேச சபைகளின் ஒன்பது தவிசாளர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவடைந்து சபையைப் பொறுப்பேற்று ஒரு வருட காலம் பூர்த்தியாகியுள்ள நிலையில் எமது சபைகளுக்குள்ளேயே சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு அது இன்று உள்ளூராட்சிச் சபைகளில் எமது கட்சியை கொச்சைப்படுத்தும் அளவுக்கு எமது கட்சி உறுப்பினர்கள் தவறான வழியில் நடந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதனை விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுத்து ஆரோக்கியமான ஒரு சபையாகக் கொண்டு செல்வதற்கு எமது கட்சியின் உயர் மட்டக்குழு ஒன்றை அமைத்து சபைக்குள் இருக்கும் சிறிய பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக உடனடியாக ஒரு குழுவை அமைத்துச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உதாரணமாக தற்போது வல்வெட்டித்துறை நகர சபை மற்றும் வலிகாமம் தென்மேற்கு, வலி.வடக்கு, வலி.மேற்கு பிரதேச சபைகளில் உள்ள பெரும் பிரச்சினைகளை உருவாக்கியதில் எமது கட்சியின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களே நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளனர் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## கிராம அலுவலர்களுக்கு விண்ணப்பம் கோரல்

நாடளாவிய பிரதேச செயலாளர் பகுதிகளில் வெற்றிடங்களாகவுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம அலுவலர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியாகியுள்ளது.

இதற்கான அடிப்படை தகைமைகளாக 30 வயதுக்கு குறைந்த கல்வி பொதுத் தராதர சாதாரண தரத்தில் ஒரேமுறையில் தாய்மொழி உட்பட கணிதத்துடன் கூடிய ஆறு பாடங்களில் சித்தி அல்லது க.பொ.த. உயர்/ தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# யாழ்.மாவட்டத்தில் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பல பகுதிகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்து செல்வதுடன் யாழ்.மாவட்டத்திலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்து செல்வதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் பருவமழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு நோயின் தாக்கம் தீவிரமடையலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து தீவிரப்படுத்தும் நோக்குடன் யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்தினால் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையான வாரம் நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாரத்தில் பின்வருமாறு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படவேண்டும். இதற்கமைவாக,

- ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் 7 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் ஒவ்வொருநாள் ஒதுக்கப்பட வேண்டும்.
- குறித்த நாளில் குறித்த வலயத்திற்குட்பட்ட சகல நிறுவனங்களும் பாடசாலைகளும் பொது இடங்களும் வர்த்தக நிலையங்களும் வணக்கத் தலங்களும் வீடுகளும் பராமரிப்பற்ற காணிகளும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு உட்பட வேண்டும்.
- இவ்வாரத்திற்கான செயற்பாடுகளை சுகாதார வைத்திய அதிகாரி பிரதேச செயலரின் தலைமையில் பிரதேச மட்டத்தில் உள்ள நிறுவனங்களையும் அமைப்புக்களையும் பாதுகாப்பு படையினரையும் இணைத்து திட்டமிடப்பட வேண்டும்.
- மேற்படி நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு பிரதேசத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களினதும் உதவி பெறப்பட வேண்டும்.
- இவ்வாரத்தில் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமான விபரங்களை ஒவ்வொரு பொது சுகாதார பரிசோதகரும் சுகாதார வைத்திய அதிகாரிக்கும் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரியும் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரிக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

எனவே, இத்தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் அனைவரது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கி டெங்கு நோயின் பரம்பலை எமது மாவட்டத்தில் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. (அ)

## சடலம் உரிமை கோரப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

முதியவரொருவரின் சடலம் 3 நாட்களாக உரிமை கோரப்படாமல் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ளதாக வைத்தியசாலையின் மேற்பார்வை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

5 ஆம் வாய்க்கால் பெரிய பரந்தன் எனும் முகவரியைச் சேர்ந்த ஆறுமுகம் (வயது 75) என்பவரின் சடலமே இவ்வாறு உரிமை கோரப்படாத நிலையிலுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இருதயநோய் காரணமாக கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த முதலாம் திகதி அனுமதிக்கப்பட்ட இவர் மறுதினமே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலத்தை உரியவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு அவர் தெரிவித்தார். (அ-4)

# ஒரு கிழமையில் 84 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் கடந்த ஏழு நாட்களில் 84 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 25 பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 15 பேரும் பொது இடங்களில் குப்பை கொட்டிய மற்றும் நுளம்பு பெருகும் வண்ணம் வீட்டுச் சூழலை வைத்திருந்த 15 பேரும் பொது இடங்களில் மது போதையில் இடையூறு ஏற்படுத்திய 12 பேரும் சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்ட 9 பேரும் பொது இடங்களில் மது மயக்கத்தில் அலைந்த 7 பேரும் சட்டவிரோதமாக மாடுகளை ஏற்றிச் சென்ற ஒருவருமாக மொத்தம் 84 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-4)


HNB

## அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கிளிநொச்சி தெற்கு, சங்கானை, திருநெல்வேலி, பருத்தித்துறை, வேலணை, சாவகச்சேரி ஆகிய கிளைகளில் 31.07.2011 இற்கு முன்னர் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 09.10.2012 செவ்வாய்க்கிழமை மாலை 3.00-6.00 மணிவரை இல.212,214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருட்களை உடனே மீட்கமுடியாவிட்டால்...

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச்செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு

ஹற்றன் நஷனல் வங்கி (சி-1225)


## வலி.தென்மேற்கு பிரதேசசபை- மானிப்பாய்

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) பதிவுடைய ஒப்பந்தகாரர்களிடம் அறிவுறுத்தலிலுள்ள வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக்கட்டணத்தையும் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 06.10.2012-18.10.2012 பி.ப. 2 மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 19.10.2012 நண்பகல் 12 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி :- 19.10.2012 பி.ப. 3.00 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூலக்கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு தவிசாளர், வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உ.உ.ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
6. வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து இருமாத காலத்திற்குள் நிறைவேற்றப்படல்வேண்டும்.
7. *மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில்* பெற்றுக் கொள்ளமுடியும்.

| இல | வேலை விபரம் | இக்ராட் தரம் | கேள்விவைப்புப் பணம் (மீளளிப்பு) | கேள்விப்பத்திரக் கட்டணம் | Vat |
|---|---|---|---|---|---|
| 01 | இளவாலை மாரீசன் கூடல் வீதி திருத்தம் | C8 | 20400.00 | 1000.00 | 142.40 |
| 02 | மானிப்பாய்ஆனந்த வைரவர் வீதி திருத்தம் | C8 | 6700.00 | 1000.00 | 142.40 |
| 03 | காடாப்புலம்பகுதியில்தொடர் சுற்றுமதில் புனரமைப்பு | C8 | 2500.00 | 1000.00 | 142.40 |
| 04 | மாதகல் போதிமயான எரிகொட்டகை அமைத்தல் | C8 | 5000.00 | 1000.00 | 142.40 |

திரு.அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்
தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.
04.10.2012

(சி-1222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய கரையோர பாதுகாப்பு மாநாடு டில்லியில்

## 18 நாடுகளின் அதிகாரிகள் பங்கேற்பு

(கொழும்பு)

இந்து சமுத்திரம் மற்றும் சர்வதேச கடற்பரப்பினூடாக இலங்கை-இந்திய கரையோரப் பாதுகாப்பிற்கு ஏற்படக் கூடிய சவால்களை தடுப்பதற்கான விசேட பாதுகாப்பு மாநாடு டில்லியில் இடம்பெறுகின்றது.

இதில் இலங்கை உள்ளிட்ட 18 நாடுகளின் கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளதாக இலங்கை கரையோரப் பாதுகாப்பு பிரிவின் பேச்சாளர் லெப்டினன் கொமாண்டர் புலேகொட ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி கூறுகையில், கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இலங்கையுடன் இணைந்து இந்தியா செயற்படுவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

இன்று ஆயுதக் கடத்தல், ஆள் கடத்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகளும் இந்த சமுத்திர கடலில் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் இரு நாடுகளினதும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன.

ஆசிய நாடுகள் என்ற வகையில் வலய நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் எனக் கூறினார். (அ-2)

# மதபோதனைகள் மூலம் தமிழர்களின் மனங்களை சீர்செய்ய வேண்டும்

## சதிந்திரிய தேரர் தெரிவிப்பு

தமிழில் மதபோதைனைகள் மேற்கொண்டு தமிழ் மக்களின் மனங்களைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவுஸ்திரேலியா விக்டோரியா மாநில பௌத்த விகாரையின் பீடாதிபதி ஹொரவ பொத்தானை சதிந்திரிய தேரர் தெரிவித்துள்ளார்.

பணம் தேடுவதற்கோ நாடாளுமன்ற ஆசனத்தைப் பெற்றுக்கொள்வதற்கோ நன்கொடைகளை பெற்றுக்கொள்வதற்கோ நாம் பௌத் துறவறம் பூணவில்லை. பௌத்த அறநெறிகளை மக்களுக்கு சரியான முறையில் போதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. போர் இருந்திருந்தால் பரவாயில்லை எனக் கூறும் சமூகத்தினரும் எம்மிடையே இருக்கின்றனர். இதன்மூலம் போர் மனநிலையிலிருந்து பலர் மீளவில்லை என்பது புனலாகின்றது. தோல்வியடைந்த தமிழர் மனோநிலையை மாற்றியமைக்க வேண்டும்.

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் பௌத்த மத கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும். பௌத்த பிக்குகள் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மனங்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் மத போதனைகளைச் செய்ய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பௌத்தர்களுக்கு எதிரான வன்முறையை கைவிடுங்கள்

## அமைச்சர் பௌஸி பங்களாதேஷிற்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கையுடன் மிகவும் சிறந்த உறவுகளைக் கொண்டுள்ள பங்களாதேஷில் ஒரு நாகரிகமற்ற செயல்களுக்கான இடமாக மாறியிருப்பது எதிர்பாராத ஒன்றாகும். எனினும் அங்கு இடம்பெற்ற பௌத்தர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவத்தையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றேன் என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் முஸ்லிம்களால் பௌத்த விகாரை தீக்கிரையாக்கப்பட்டு பலர் காயங்களுக்குள்ளாகியுள்ளமை தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்து இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் சபியுர் ரஹ்மானுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியிருப்பவை வருமாறு,

இலங்கையில் சிறுபான்மையினராக வாழும் முஸ்லிம்களைப் போல் பங்களாதேஷில் பௌத்தர்கள் சிறுபான்மையினராக வாழ்கிறார்கள்.

இந்நிலையில் பங்களாதேஷில் பௌத்தர்களுக்கெதிராக வன்முறைகள், இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு வழிகோலும். ஆகவே, பங்களாதேஷ் அரசாங்கம் பௌத்தர்களுக்கு பாதுகாப்பு வழங்கி மதங்களுக்கு கௌரவமளிக்க வேண்டும். இலங்கையில் எமக்கு பாதுகாப்பும் மதச் சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளது.

எந்த நாடுகளானாலும் சரி அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகளை கண்டிக்கின்றேன். இதற்கிணங்க உங்கள் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட துரதிர்ஷ்டவசமான சம்பவத்துடன் தொடர்புடையவர்களை இணங்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டுமெனவும் கோருகின்றேன் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 2012.10 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1582-கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.

★1683-வில்லியம் பென் தன்னுடன் 13 ஜேர்மனியக் குடும்பங்களை பென்சில்வேனியாவுக்கு அழைத்து வந்து குடியேற்றினார். இவர்களே முதல் முதலாக அமெரிக்காவுக்கு குடியேறிய ஜேர்மன் மக்களாவர்.

★1762-ஏழாண்டுப் போர்: பிரித்தானியாவுக்கும் ஸ்பெயினுக்கும் இடையில் மணிலாவில் இடம் பெற்ற போர் முடிவுக்கு வந்தது. ஏழாண்டுப் போர் முடிவடையும் வரையில் பிரித்தானியா மணிலா வைத்தன் பிடியில் வைத்திருந்தது.

★1789-பிரெஞ்சுப் புரட்சி முன்னைய நாள் பெண்களின் போராட்ட அணியை வேர்சாய் அரண்மனையில் எதிர்கொண்ட பிரான்சின் பதினாறாம் லூயி மன்னன் அங்கிருந்து பாரிஸ் திரும்பினான்.

★1847-சாமுவேல் பிஸ்கிறீன் பருத்தித்துறையை வந்தடைந்தார்.

★1849-ஹங்கேரிய விடுதலைப் போரின் முடிவில் போராளிகள் 13 பேர் அராட் (தற்போது ருமேனியாவில்) என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டனர்.

★1854-இங்கிலாந்தில் நியூகாசில் மற்றும் கேற்ஸ்ஹெட் நகரங்களில் பரவிய பெருந் தீயில் 54 பேர் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

★1870-ரோம் இத்தாலியின் தலைநகரானது.

★1889-தான்சானியாவின் கிளிமஞ்சாரோ மலையின் உச்சி முதன்முதலில் எட்டப்பட்டது.

★1889-தோமஸ் அல்வா எடிசன், தனது முதலாவது அசையும் படத்தைக் காண்பித்தார்.

★1890-யாழ்ப்பாண நகரில் சின்னக் கடை எனப்படும் முக்கிய சந்தையில் கடைத்தொகுதி ஒன்று இடிந்து வீழ்ந்ததில் பலர் உயிரிழந்ததோடு படுகாயமடைந்தனர்.

★1903-அவுஸ்திரேலியாவின் உயர்நீதிமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றது.

★1908-ஆஸ்திரியா தன்னுடன் பொஸ்னியா ஹெர்செகோவினாவை இணைத்துக் கொண்டது.

★1922-முதலாம் உலகப் போர்: இஸ்தான்புல்லில் இருந்து பெரும் வல்லரசுகள் வெளியேறின.

★1927-முதலாவது பேசும் படம் த ஜாஸ் சிங்கர் வெளியானது.

★1939-இரண்டாம் உலகப் போர்: போலந்தின் கடைசி இராணுவத்தினர் தோற்கடிக்கப்பட்டனர்.

★1955-வயோமிங்கில் டிசி-4 விமானம் ஒன்று வீழ்ந்ததில் 66 பேர் உயிரிழந்தனர்.

★1966-எல்.எஸ்.டி. ஐக்கிய அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.

★1973-80 ஆயிரம் எகிப்தியப் படைகள் சூயஸ் கால்வாயைக் கடந்து இஸ்ரேலிய பார்லேவ் கோட்டை அழித்து யொம் கிப்புர் போரை ஆரம்பித்தன.

★1976-பார்படோசில் இருந்து புறப்பட்ட கியூபா விமானம் ஒன்று பிடெல்காஸ்ட்ரோவுக்கெதிரான தீவிரவாதிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதில் 73 பேர் உயிரிழந்தனர்.

★1976- தாய்லாந்தின் அரசுக்கெதிராக இடம்பெற்ற மாணவர் போராட்டம் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★1981-எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் கொலை செய்யப்பட்டார்.

★1987-பிஜி குடியரசாகியது.

★1995-சூரியனுக்கு அடுத்ததாக கோளைத் தன்னகத்தே கொண்ட பெரும் விண்மீன் 51 பெகாசி கண்டறியப்பட்டது.

★2000-யுகோஸ்லாவியா ஜனாதிபதி ஸ்லோபோடன் மிலோசெவிக் இராஜினாமா செய்தார்.

★2010-தமிழ் விக்கிபீடியாவில் 25 ஆயிரம் கட்டுரை இலக்கு எட்டப்பட்டது.

### பிறப்புக்கள்

★1982-சிபிராஜ், தமிழ்த் திரைப்பட நடிகர்

★1982- எம்.சிலார்ஸ், அமெரிக்க ஹிப்-ஹோப் கலைஞர்

★1982-வில்லியம் பட்லர், இசை கலைஞர்

★1984-மோர்னே மோர்கெல், தென் ஆபிரிக்க துடுப்பாட்ட வீரர்

★1985-சில்வியா போவ்லேஸ், அமெரிக்க கூடைப்பந்து வீராங்கனை

★1986-தெரேசா கேர்நட்லோவ், செக் குடியரசு பாடகி

### இறப்புக்கள்

★1661-குரு ஹர ராய், ஏழாவது சீக்கிய குரு (பி.1630)

★1892-அல்பிரேட் லார்ட் டென்னிசன், ஆங்கிலேய கவிஞர் (பி. 1809)

★1905-பேர்டினண்ட் வொன் ரிச்தோஃபென், ஜேர்மனிய புவியியலாளர் (பி.1833)

★1981-அன்வர் சதாத், எகிப்திய ஜனாதிபதி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1918)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரட்சி குறித்து ஆராய்வதற்கு நிமால் தலைமையில் குழு

வரட்சியினால் பாதிக்கப்பட்ட இடங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் கடும் வரட்சி தொடர்பாக அமைச்சரவை தீவிரமாக ஆராய்ந்த பின்னரே இந்த அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

நியமிக்கப்பட்ட அமைச்சருக்கு உதவி வழங்க உத்தியோகத்தர்கள் குழுவொன்றை நியமித்து மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக நீண்ட மற்றும் நடுத்தர பரிகாரங்களை மேற்கொள்ள அமைச்சரவைக்கு சிபார்சுகள் வழங்குதல்களை அமைச்சரவை உபகுழு மேற்கொள்ளும்.

தற்போது ஏற்பட்டுள்ள வரட்சிநிலை தொடர்ந்தும் இருக்கும் என்ற அறிகுறிகள் தென்படுவதால் வரட்சிக்கு எவ்வாறு முகம் கொடுப்பது தொடர்பாகவும் அமைச்சரவை கவனத்தில் கொண்டுள்ளது. (அ-2)

# கூடங்குளம் அணுஉலை பாதிப்புகள் குறித்துப்பேச இலங்கையிலிருந்து குழு

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

கூடங்குளம் அணு உலையினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுப்பது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அணு சக்தி அதிகாரசபை அதிகாரிகளுக்கிடையில் நடைபெறும் முதலாவது கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி இந்தியாவில் நடைபெறவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூடங்குளம் அணுஉலை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்தபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலிருந்து ஆறு பேர் அடங்கிய குழுவொன்று அங்கு செல்ல உள்ளதோடு, கூடங்குளம் தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது குறித்தும் இங்கு ஆராயப்படவுள்ளது.

கூடங்குளம் அணுஉலையினால் இலங்கைக்கு ஏதும் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் இலங்கை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது எமது பொறுப்பாகும். சுற்றியுள்ள நாடுகளின் பாதுகாப்பை பலப்படுத்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அணுஉலையினூடாக அணுக்கசிவு ஏற்பட்டால் அதனால் மன்னார், யாழ். குடா ஆகிய பகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

எனவே, சர்வதேச அணுசக்தி உடன்பாட்டின் பிரகாரம் இந்தியா செயற்படவேண்டும். இது தொடர்பில் இந்த சந்திப்பில் ஆராயப்படும்.

அணுக்கசிவு நிகழும் பட்சத்தில் அதனால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க இடர் முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

இந்திய தரப்பில் அந்நாட்டு அணுசக்தி அதிகாரசபை அதிகாரிகள் பங்கேற்கின்றனர். சர்வதேச அணுசக்தி அதிகார சபை உடன்பாட்டின் பிரகாரம் இந்தியா, இலங்கைக்கு தேவையான உதவிகளை வழங்க வேண்டும். இது தொடர்பில் நாம் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை தயாரித்துள்ளோம். இது இந்திய அணுசக்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# 'எம்மை வாழ வைத்தவர்கள்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபரான பொ.கனகசபாபதியினால் எழுதப்பட்ட **எம்மை வாழ வைத்தவர்கள்** எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 10 ஆம்திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு துரையப்பாபிள்ளை மண்டபத்தில் கல்லூரி அதிபர் கு. வேல்சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் நா. சண்முகலிங்கன் நூலை வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறையின் செயலாளர் சி.சத்தியசீலன் பெற்றுக்கொள்வார். இந்நூலின் ஆய்வுரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பேராசிரியர் மா. சின்னத்தம்பி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உடற்றொழிலியற்றுறை இணைப்பேராசிரியர் க.சிவபாலன், கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். தொடர்ந்து நூலாசிரியர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது. (அ-9)

# ஐந்துலாம்பு சந்தியில் கடைகள் அகற்றப்பட்டன

கொழும்பு ஐந்துலாம்பு சந்தியின் 5 ஆம் குறுக்குத் தெருவுக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கடைகள் கொழும்பு மாநகர சபையினால் அகற்றப்பட்டுள்ளன.

இக்கடைகள் நேற்று முன்தினம் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முன்னறிவித்தலின்றி தமது கடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதன் காரணமாக தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-2)

# நாணயத்தாள் கடத்த முயன்ற இருவர் கைது

வெளிநாட்டு நாணயத்தாள்களை சட்ட விரோதமாக எடுத்துச்செல்ல முயற்சித்த இருவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கைதுச்சம்பவம் நேற்றையதினம் அதிகாலை இடம்பெற்றது.

சந்தேகநபர்களிடமிருந்து சுமார் 16 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டதாக விமானநிலைய சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# வடமாகாண அங்கீகாரத்திற்காக காத்திருக்கும் திவிநெகும சட்டமூலம்

(கொழும்பு)

மாகாண சபையொன்று இயங்காத நிலையில் செயற்பாடுகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமையவே அரசாங்கம் செயற்படுகிறது.

எந்நேரத்திலும் அரசியலமைப்புக்கு முரணாக அரசு செயற்படப்போவதில்லை என அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

திவிநெகும சட்டமூலம் எட்டு மாகாண சபைகளிலும் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் வடக்கில் மாகாண சபையொன்று ஏற்படுத்தப்படாத நிலையில் திவிநெகும சட்டமூலம் எவ்வாறு நிறைவேற்றப்படலாம் என செய்தியாளர் ஒருவர் நேற்று முன்தினம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

ஒரு மாகாண சபை இயங்கவில்லை அல்லது ஏற்படுத்தப்படவில்லை என்பதற்காக முழு நாட்டையுமே இருளில் தள்ளிவிட முடியாது. இந்தச் சட்டமூலம் எட்டு மாகாண சபைகளிலும் நிறைவேற்றப்பட்டு வடமாகாண சபையில் மட்டும் நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக ஒதுக்கிவிட முடியாது. அதற்கு எவ்வாறு செயற்பட வேண்டும் என அரசியமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. எனவே, அதன்படி அரசு செயற்படும் என்றார்.

திவிநெகும சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது மாகாண சபைகளின் அங்கீகாரம் முதலில் பெறவேண்டும் என உச்சநீதிமன்றம் அறிவித்திருந்தது. இதற்கமைய இச்சட்டமூலம் மாகாண சபைகளுக்கு அனுப்பப்பட்டன.

மத்திய மாகாணசபையில் 19 மேலதிக வாக்குகளாலும் கிழக்கு மாகாணசபையில் 6 வாக்குகளாலும் சப்ரகமுவ மாகாண சபையில் 15 வாக்குகளாலும் தென் மாகாணசபையில் 21 வாக்குகளாலும் வடமத்திய மாகாண சபையில் 7 வாக்குகளாலும் ஊவா மாகாண சபையில் 17 வாக்குகளாலும் மேல்மாகாண சபையில் 40 வாக்குகளாலும் வடமேல் மாகாண சபையில் 36 மேலதிக வாக்குகளாலும் நிறைவேறியது. இறுதியாக வட மாகாணத்தின் அங்கீகாரம் பெறவேண்டிய நிலையில் திவிநெகும சட்டமூலம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


# தேசிய அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமி கொட்டப்புலத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் றொபேக்கா என்பவரது (958461305 V) எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (அ-9)





உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவி சரோஜா சிவச்சந்திரன் எழுதிய சிறுவர் உரிமைகள் நூல் வெளியீட்டுவிழா கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை நூலாசிரியரிடமிருந்து மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# 2 1/2 வருடங்களாக காணாமல்போன சிறுமி மீட்பு

(குருவிட்ட)

பதுரளிய பிரதேசத்திலிருந்து கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் காணாமல்போன 10 வயது சிறுமியொருவர் மீட்கப்பட்டுள்ளார்.

குருவிட்ட பிரதேசத்தில் சந்தேகநபர் ஒருவரால் நேற்றுமுன்தினம் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

இச்சிறுமி பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா? என்பது தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரியிடம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு இரத்தினபுரி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, சிறுமியை மறைத்து வைத்திருந்த சந்தேகபநபர் அப்பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கை வரலாறு

62

# மகா பராக்கிரமபாகு


கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

பராக்கிரமபாகுவின் திக்விஜயம் தான் பிறந்த நாட்டிற்கு வந்த பராக்கிரமபாகு இங்கு மிக மகிழ்ச்சிகரமாக வாழ்ந்தான். ஆட்சிக்கலை முதலான பல் கலைகளையும் கற்றுத் தன் திறனை வளர்த்துக் கொண்டான். சமயநெறிகள், இலக்கியம், கவிதை பாடும் ஆற்றல் என்பவற்றை வளர்த்துக்கொண்டான். மன்னனும், தன் பெறாமகனைத் தான்செல்லுமிடமெல்லாம் அழைத்துச் சென்றான். ஒருநாள் அவ்வாறான ஒரு பயணத்தின்போது பராக்கிரமபாகு, பாடத்தாலி எனும் கிராமத்திற்கு வந்தான். இக்கிராமத்தில்தான் ஸ்ரீவல்லப மன்னனின் எல்லைப்புறப் பிரதேசங்களைக் காவல் காத்து வரும் சேனாதிபதி வாழ்ந்து வந்தான். பராக்கிரமபாகு இளவல் வரும் செய்தி அறிந்த சேனாதிபதி, கிராமத்தை அலங்கரித்து, வரவேற்பளித்து, தலை வணங்கி நின்றான். அவனது விருந்தோம்பலை ஏற்றபின், அந்தக் கிராமத்தில் பராக்கிரமபாகுவும் அவன் ஆளணியினரும் சில நாட்கள் தங்கியிருந்தனர். அங்கு நடந்த விழாக்களில் கலந்து மகிழ்ந்திருக்கும்போது உருகுணையிலிருந்து வந்து தூதுவர்கள், ஸ்ரீ வல்லப மன்னர் மரணமடைந்தார் என்ற செய்தியைத் தெரிவித்தனர். பராக்கிரமபாகு நாடு திரும்புவதற்கு முன் ஸ்ரீ வல்லபனது மகனான மானவர்மன் ஆட்சியை ஏற்றுக் கொண்டு, மித்தாவை ராணியாக்கினான். சகோதரன் இறந்த செய்தியை அறிந்த கீர்த்தி ஸ்ரீ மேகன், பராக்கிரமபாகுவுடன் உடனடியாக சங்கத்தாலி நகருக்கு வந்து தங்கினான். ஓர் ஆண்டு அங்கு தங்கினர். அவ்வேளை மானவர்மனின் இரண்டாவது ராணியான பகவதிக்கு, கீர்த்தி மேகன் என ஒரு மகன் பிறந்த செய்தியும் தெரிய வந்தது.



மகா பராக்கிரமபாகு கட்டுவித்த ஏழடுக்கு கிணறு

பராக்கிரமபாகு தன் கனவுகளை மறக்கவில்லை. இலங்கை முழுவதையும் ஒருகுடையின் கீழ் கொண்டு வரவேண்டுமென்ற அவாவை அவன் என்றும் கொண்டிருந்தான். "இந்தத் தீவு அப்படி ஒன்றும் பரந்த பரப்பினைக் கொண்டதல்ல. இது பௌத்தத்தின் புனித இல்லம். மூன்று மன்னர்களை இந்த நாடு கொண்டுள்ளது. எனது சிறியதந்தை கீர்த்தி ஸ்ரீ மேகனைவிட, மற்றிரு சகோதரர்களும் மரணமடைந்துவிட்டனர். நான் எனது இலட்சியத்தைக் கைவிட்டேன். எனது வளர்ப்புத் தந்தை, சிறியதந்தை எனது மனநிலை அறிவார். ஆனால், அவற்றினை நிறைவேற்று முகமாக நான் திக் விஜயம் மேற்கொள்வதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். ஆகவே, நான் எவரும் அறியாமல் எனது ஆதரவாளர்களோடும் வீரர்களோடும் இரகசியமாக வெளியேற வேண்டியதுதான்" எனப் பராக்கிரமபாகு முடிவு எடுத்துக்கொண்டான். அவ்வாறே ஓரிரவு தனது இலட்சியத்தினை அடையப் பயணப்பட்டான்.



மகா பராக்கிரமபாகுவின் அரண்மனை குளியலறை


தட்சிணதேச மன்னான கீர்த்தி ஸ்ரீ மேகன் அறியாமல் தன் சில படை வீரர்களோடும்சில ஆதரவாளர்களோடும் தலை நகரைவிட்டு அகன்று இராஜரட்டை இராச்சியத்துள் நுழைய பராக்கிரமபாகு ஆயத்தமான். பல் லீக்குகள் கடந்த தக்கிணதேசத்தின் பாடலத்தாலி என்னும் கிராமத்தின் எல்லையை அடைந்தனர் அவ்விடத்தில் தன் படை வீரர்களையும் ஆதரவாளர்களையும் முன்னராகவே வந்து கூடி நிற்குமாறு பராக்கிரமபாகு பணித்திருந்தான். ஆனால் அத்திட்டப்படி போதிய எண்ணிக்கையினர் அவ்விடத்தில் கூடியிருக்காமை இளவரசனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அன்றிரவு அவ்விடத்தில் தங்கிவிட்டு சூரிய உதயத்துடன் அவர்கள் புறப்பட்டு அக்கிராமத்தினுள் நுழைந்தனர். அக்கிராமம் சங்கா என்ற சேனாதிபதியால் நிர்வகிக்கப்பட்டு வரும் எல்லைக்கிராமமாகும். இளவரசனின் வருகையை அறிவிக்கும் சங்கொலி கேட்டுத் தன் பரிவாரங்களுடன் அவ்விடத்திற்குச் சங்கசேனாதிபதி விரைந்து, இளவரசனையும் அவன் ஆட்களையும் எதிர்கொண்டு வரவேற்றான். இளவரசனை இன்னார் எனத் தெரிந்து அவன் முன் மண்டியிட்டுத் தலை சாய்த்து வணங்கினான்.





மகா பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்துக்குரிய வெள்ளி நாணயம்

அவனைத் தன் கரத்தால் தொட்டுத் தூக்கிவிட்டதோடு, அவனுடன் அவன் மாளிகைக்கு விருந்தினனாகச் சென்றான். சங்கசேனாதிபதி இளவரசனை வரவேற்று உபசரித்த அதேவேளை, மன்னனுக்குத் தெரியாமல் பராக்கிரமபாகு புறப்பட்டு திக்விஜயத்தை மேற்கொண்டமையை உணர்ந்து, இரகசியமாக மன்னனுக்குத் தகவல் அனுப்பி வைத்தான். இளவரசனுக்கு இந்தச்செய்தி தெரிய வந்ததும் தன் நீண்ட இலட்சியத்துக்கு இவன் செய்கை தடையாகுமென்றுணர்ந்து அவனைக் கொன்றுவிட முடிவு செய்து நிறைவேற்றினான். சேனாதிபதியின் மரணத்துக்குப் பின்னர் அவனது சொத்துக்களை தமக்குள் பகிர்ந்து கொள்ளத் தன் வீரர்களுக்குப் பராக்கிரமபாகு அனுமதித்தான்.



மகாபராக்கிரமபாகு அமைப்பித்த தாமரைக்குளம்

பாடலத்தாரிக் கிராமத்தை விட்டு உடனடியாகப் புறப்பட்டால் சேனாதிபதியைக் கொன்ற பயத்தால் இளவரசன் அகன்றுவிட்டான் எனக் கருதக் கூடும் என்ற காரணத்தால் அக் கிராமத்தில் சிலகாலம் பராக்கிரமபாகு தங்கினான். அத்துடன் மன்னனாகிய தன் சிறியதந்தை தனது திறன் மிக்க சேனாதிபதியைக் கொன்றமைக்காக யாது நடவடிக்கை எடுக்கவுள்ளான் என்பதை அறியவும் விரும்பிச் சில நாட்கள் அக்கிராமத்தில் தங்கியிருந்தான். சேனாதிபதிக்கு அத்தண்டனை வழங்கியது, தன் சிறியதந்தைக்கு எதிராகப் புரட்சி செய்யும் நோக்கத்துடனல்ல என அறிவித்தான். பாடலத்தாலிக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டு, சிறியாலைக் கிராமத்திலுள்ள சிறிதேவி மலைக்கு அருகிலுள்ள புத்தகமத்தை நோக்கி வந்தான். ஆயுததாரிகளாக அக்கிராமத்துள் பிரவேசித்ததும் மக்கள் பலரும் பயத்தால் அக்கிராமத்தைவிட்டு ஓடிவிட்டார்கள். நெடுந்தீவில் அவர்கள் நடந்து வரும்போது, "அரசனின் சேனாதிபதியைக் கொன்ற இளவரசன் வருகின்றான்" எனக்கூவிக் கொண்டு சிலர் இளவரசன் மீது பாய்ந்தார்கள். பயமறியாத பராக்கிரமபாகு தன் வாளை உருவி அவர்களைத் தாக்கி சிதறியோடச் செய்தான். பின்னர் புத்தகமத்தை வந்தடைந்தார்கள் என்கிறது சூளவம்சம்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்டியில் பீடைகளும் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

22-IV



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வெண்டிப் பயிரிலேற்படும் பீடைகளைப் பற்றி விளக்கமாக ஆராய்ந்து கொண்டிருக்கும் இக்கட்டுரைத் தொடரினூடாக வெண்டி பயிர்ச் செய்கையில் ஏற்படும் நோய்களின் தீவிரம் பற்றியும் அவை ஏற்படுத்தும் பாதிப்பு பற்றியும் தருவது முக்கியமானதாகும்.

வெண்டிப் பயிருக்கு நோய்களினால் ஏற்படுத்தப்படும் பாதிப்பு அநேகமாக கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. மரக்கறிப் பயிர் வகையினுள் உள்வாங்கப்பட்டுள்ள வெண்டியில் துகள் பூஞ்சணம் (Powdery Mildew), இலைச் சித்திர வடிவு,, வேர் முடிச்சு என்பன முக்கியமான நோய்களாகும். இதில் துகள் பூஞ்சணம் வளிமண்டல ஈரப்பதன் அதிகரித்திருக்கும் காலநிலையில் வளிமண்டல வெப்பநிலை குறைவடையும் போது வெளிக்காட்டத் தொடங்கும். இவ்வருடம் செப்டெம்பர் மாத மழை பொய்த்து ஒக்டோபரிலும் எதிர்பார்த்த மழை வீழ்ச்சி ஆரம்பத்தில் குறைவாகவே கிடைத்திருக்கிறது.

இன்னும் இவ்வருடத்துக்கான மழை இன்னும் பொழிய வேண்டும். காலபோகம் ஆரம்பமாகி அதற்கான தயார்ப்படுத்தல்களில் விவசாயப் பெருமக்கள் மும்முரமாக இருக்கும் இந்நிலையில் இவ்வருடத்துக்கான மழை இனித்தான் ஓங்கியடித்து பொழியவிருக்கின்றதை நாமெல்லோரும் எதிர்பார்த்திருக்கிறோம். மழை பொழிய குறுகிய கால இடைவெளிக்குள் பொழியுமாயின் அது காலநிலையை விரை ந்து மாற்றிவிடும். இந்த மாற்றம் எதிர்பார்த்த தைவிட வழக்கத்துக்கு மாறானதாக இருக்கும். தொடர்ச்சியான வரண்ட காலநிலையில் கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் பயணித்த எமக்கு இனியேற்படப்போகும் காலநிலை மாற்றம் சாதகமானதான இருப்பினும் பாதகமான நிலைமைகளையும் ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது. இந்த மாற்றத்தை அனுமாகிக்கக்கூடிய இன்னும் எதிர்வுகூறக் கூடியதான வளிமண்டல நிலையத்தின் தேவையை எமது பிரதேசம் எதிர்பார்த்திருக்கின்றது. இது இனிவரும் அபிவிருத்திக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட வேண்டிய முக்கியமான அம்சமாகும்.

வடபகுதியில் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியிலும் மற்றும் வவுனியாவில் வளிமண்டல திணைக்களத்தின் உப நிலையங்கள் அமைந்திருப்பதும் அவற்றில் பதிவு செய்யப்படும் வளிமண்டல பௌதீக காரணிகளின் தகவல்கள் காலநிலையின் மாற்றத்தை அறிய உதவுவது குறிப்பிடத்தக்கது. அதிலும் இக்காலநிலை மாற்றம் பற்றி ஆய்வுகள் இப்பிரதேசத்தில் முனைப்புடன் முன்னெடுக்க வேண்டியதன் தேவையையும் அவசியத்தையும் இவ்விடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். இனிவருங்காலம் இக்காலநிலை மாற்றங்களை அனுசரித்து செய்யும் விவசாயமாக இருக்கும் என நாம் எண்ணலாம். அதற்கான தயார்ப்படுத்தலுக்காக நாம் முன்



வரவேண்டும். வரண்ட வலயமென அடையாளப்படுத்தப்பட்ட எமது பிரதேசம் இக்கால நிலை மாற்றத்தினுள் சிக்குப்பட்டு சின்னாபின்னமாகக் கூடிய வாய்ப்புக்கள் ஏராளம். இந்த பிரச்சினைக்கு நேரடியாக முகங்கொடுக்க நாம் விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

மழை அதிகமாக குறுகிய கால இடைவெளிக்குள் பொழியும் போது வளிமண்டல வெப்பநிலை கணிசமான அளவு திடீரென குறைந்து வளிமண்டல ஈரப்பதன் திடுதிப்பென அதிகரித்துவிட பூஞ்சண நோய்கள் விரைந்து தலையெடுத்து விடும். இதனால் பயிரழிவுகள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம். இவ்வருட காலபோகத்துக்கான சவாலாக அமையும் என எதிர்பார்ப்பதுடன் மாறாக மழை வீழ்ச்சி கணிசமானளவு குறைந்து கிடைக்க வேண்டிய மழை வீழ்ச்சி பொய்த்து விடவும் சாத்தியக் கூறு உண்டு. இதனை மிகைப்படுத்தி எதிர்வு கூறப்படாவிட்டாலும் மழை வீழ்ச்சி குறைந்து 2013 ஆம் வருடம் மேலும் வரண்டதாகவும் பயிர்ச்செய்கை செய்வதற்கு நீரைத் தேடியோட வேண்டியதாகவும் ஏற்படலாம். இவ்வருட வரட்சி சூழ்நிலை இன்னும் விசாலமானதாக தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் ஏற்படலாம். மேலே குறிப்பிட்டது போல எதிர்மாறான விளைவுகளேற்பட வாய்ப்பிருப்பதனால் இதுபற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது எங்களூர் விவசாயத்தை காப்பாற்ற உதவும். மேலும் மாறிவரும் காலநிலைக்கேற்ப விவசாய செய்கைகளிலும் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தல் நல்லது.

துகள் பூஞ்சணத்தின் தோற்றம், அறிகுறிகள் மற்றும் பாதிப்பு பற்றி ஏற்கனவே இத் தொடரில் தரப்பட்டிருக்கின்றது. அதனைவிட இலைச்சித்திரவடிவு நோய் வைரசினால் ஏற்படுத்தப்படுவதாகும். இவ் வைரசுவினை பச்சையிலைத் தத்திகள் காவுகின்றன. இதனைவிட விதை மூலம் வரும் சாத்தியக்கூறுகயையும் மறுப்பதற்கில்லை. இலைச்சித்திர வடிவு வைரசு தொற்று பாரியளவிலான பாதிப்பை வெண்டியில் ஏற்படுத்தவும் வல்லது. இதனால் இவ் வைரசு அறிகுறி கொண்ட தாவரங்களை பிடுங்கி அகற்றி அழிப்பதே சிறந்ததாகும்.

மூன்றாவதாக வேர் முடிச்சுக்களை வெண்டியின் வேர்களில் ஏற்படுத்தும் வேர் முடிச்சு விலாங்குப் புழுக்களின் எண்ணிக்கையை மண்ணினுள் குறைத்து அவற்றை சிறந்த முறையில் கட்டுப்படுத்தல் அவசியம். வேர் முடிச்சு விலாங்குப்புழு (Root knot nematode) ஒல் பல் தாவரங்களில் சேதத்தை ஏற்படுத்தவல்லது. ஆகையால் இதனை கார்போபியூரான் 3% G குருணல் அல்லது ரைக்கோ டேர்மா எனும் உயிர் பங்கசு எதிரியை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். விலாங்குப் புழுக்களின் எண்ணிக்கை மண்ணில் அதிகரித்து விடாது பார்த்துக் கொள்வது முக்கியமாகும். இதனது தாக்கம் வெண்டிப் பயிரில் அதிகமில்லாதிருப்பினும் ஏனைய விருந்து வழங்கி தாவரங்களில் அதிகமாயிருக்கும். வெண்டி பீடை முகாமைத்துவம் இவை அனைத்தினையும் கருத்தில் கொண்டதாக அமைதல் வேண்டும். வெண்டிக்காயை ஆவியிலவித்து உண்ணுவதால் தேவையற்ற பீடைநாசினி பிரயோகத்தை தவிர்ப்பது என்றுமே நல்லது.

# விவசாயிகளுடன் ஜனாதிபதி பேச்சு

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடகவியலாளர் மற்றும் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக ஆலோசனைகள் மற்றும் உள்ளீடுகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்தப் பேச்சுவார்த்தை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நாடு முழுவதிலும் உள்ள விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அலரி மாளிகையில் ஜனாதிபதியை சந்தித்துள்ளனர். நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்படும் சகல சலுகைகளும் வசதிகளும் வடக்கு, கிழக்கு விவசாயிகளுக்கும் வழங்கப்படும் என ஜனாபதிபதி உறுதியளித்துள்ளார்.

வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக நிவாரணங்கள் வழங்கப்படும். இதேவேளை இளம் தலைமுறையின் வளர்ச்சியில் இலத்திரனியல் ஊடகங்களுக்கு மிக முக்கியமான பங்கிருப்பதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்கால சந்ததியினரின் நலனைக் கருத்திற் கொண்டு ஊடக நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# அரசாங்கத்தை எதிர்க்க ஐ.தே.க. கூட்டணியில் மேலும் இரு கட்சிகள்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணியில் இணைந்து அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட மேலும் இரண்டு கட்சிகள் கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹேமகுமார நாணயக்காரவின் மௌபிம ஜனதா கட்சி, சிறிமசிறி ஹப்புவாராச்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் முன்னணி ஆகிய அரசியல் கட்சிகளே எதிர்க்கட்சி கூட்டணியுடன் இணைய தீர்மானித்துள்ளன.

ஹேமகுமார நாணயக்கார புதிய கட்சியை ஆரம்பித்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

முக்கியமாக ஹேமகுமார நாணயக்கார, சிறிமசிறி ஹப்புவாராச்சி ஆகியோர் மக்களுக்காக அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தவே எதிர்க்கட்சிக் கூட்டணியில் இணையவுள்ளனர். அரசாங்கத்திற்கு எதிராக போராட அனைத்து அரசியல் சக்திகளும் ஒன்றாக ஒன்றிணையுமாறு ரணில் விக்ரமசிங்க விடுத்திருந்த அழைப்பை அடுத்தே இந்த கட்சிகள் எதிர்க்கட்சிக் கூட்டணியில் இணைய தீர்மானித்துள்ளன.

இந்தக் கட்சிகளுடன் எதிர்க்கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது. இதன் மூலம் அரசியத்திற்கு எதிராக நாட்டில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பை விளங்கி கொள்ள முடியும் என அந்த கூட்டணியில் அங்கம் வகிக்கும் புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்துள்ளார். (அ-2)

# வரட்சி நீடித்தால் மின்வெட்டு அமுலுக்கு

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்தும் வரட்சியான காலநிலை நீடித்தால் மின்வெட்டு அமுல் படுத்த நேரிடலாம் என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். நீர் மின் உற்பத்தி நிலையங்களை அண்டிய பகுதிகளுக்கு போதியளவு மழை கிடைக்கவில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மின்சார நெருக்கடிகளை தடுக்கும் வகையில் மக்கள் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் மின்சாரத் தடை ஏற்படாமல் இருப்பதனை உறுதி செய்ய முயற்சி எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப் பார்த்தல்:- ஆசிரியரின் பழைய முகங்கள்

வரலாறுகள் சிந்தனையாளர்களின் கருத்து வெளிப்பாடுகள் மற்றும் போதனைகளின் தோற்றப்பாடுகளே. நாகரிகத் தொட்டில்களான கிரேக்க, ரோமானிய பேரரசுகளின் வளர்ச்சி அக்கால சிந்தனையாளர்களான ஆசான்களின் வரலாறுகளுடன் ஒன்றிணைந்திருந்தன.

இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆசிரிய வளர்ச்சி முகங்களை விளங்கிக் கொள்வதற்கு கடந்து வந்தவற்றை திரும்பிப் பார்ப்பதும் அவசியமாகின்றது. அவை பல படிப்பினைகளைச் சொல்கின்றன.

**கடவுளும் மனிதர்களும்**

கட்புலனாகாத கடவுளை மக்கள் உணர்வதற்கு கட்புலனாகும் குருவானவர்கள் தேவைப்பட்டார்கள் என ஈரானிய தத்துவஞானி லைலி எஷ்குவி (1992) குறிப்பிட்டார். இதனாலேயே ஆசான்களுக்கு தெய்வீகத் தன்மை ஏற்பட்டு விடுகிறது. உன்னதமான- தூய்மையான கடவுளை உணரச் செய்பவர்கள் தெய்வீகமானவர்கள் தானே!

புராதன காலத்தில் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இடையே தூய்மை நிறைந்த குறிக்கோள்களுடன் செயற்படுபவர்களாக ஆசான்களை சமூகம் அங்கீகரித்தது.

ஆசைகளும் தேவைகளும் நாட்டங்களும் இலட்சியங்களும் ஆற்றல்களும் பிரச்சினைகளும் கொண்ட மனிதர்கள் கடவுளைக் காண முடியாது. மனிதர்கள் தங்களைத் தாங்களே பூரணமாக அறிந்து கொள்வதற்குரிய திறவுகோலை கடவுள் ஆசிரியர்களிடமே வழங்கியிருப்பதாக நம்பப்பட்டது.

மனிதர்களுக்கான ஆன்மீகப் புரட்சியின் முகவர்களாக ஆசிரியர்களே விளங்க வேண்டும்; விளங்க முடியும் என்று வரலாற்றுக்காலம் முழுவதும் நம்பப்பட்டது.

மனிதர்களுக்கு தெளிந்த அறிவைக் கொடுப்பது மாத்திரமன்றி புதிய அனுபவங்களை பெறக்கூடிய அகமாற்றங்களை அவர்களிடம் உருவாக்குவதுமே ஆசிரியர்களின் கடமைக்கூறாக கருதப்பட்டு வந்தது. வறுமை, அறியாமை, தூய்மையின்மை என்ற எல்லாத் தடைகளையும் கடந்து அகமாற்றங்களையும் பெற வேண்டும் என்ற வலுவான முனைப்பை தனது மாணவர்களிடம் உருவாக்கி விடுவதற்காக எந்நேரமும் அதற்குரிய வகையில் அறிவு, பக்குவம், முனைப்பு என்பவற்றை வளர்த்துக் கொண்டே இருப்பவர்களே ஆசிரியர்களாகின்றனர்.

தன்னிடம் கற்கும் மாணவரிடம் ஏற்படும் படிப்படியான முன்னேற்றங்களில் ஒழுங்குகளும் கடமைகளும் சரியாகப் பின்பற்றப்படுவதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும் என்று நம்பப்பட்டது.

**குருவும் சீடனும்**

பண்டைக்கால புகழ்பெற்ற நூல்களான பிராஹ்மணா, உபநிஷத், தர்மா போன்றவை இந்தியாவின் சமய வரலாற்றுத் திருப்புமுனைகளை உருவாக்கின. இவற்றில் குரு- சீடன்



சார்ந்த தொடர்புகள் தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளன.

சமஸ்கிருதத்தில் "குரு" என்பவர் ஆன்மீக ஆசான் ஆவார். குருவானவர் சீடர்கள் எப்படி சிந்திக்க வேண்டும் என்பதை விடவும் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கற்றுத் தருவதில் அதிக அக்கறை காட்டுபவர். அனைவரும் பின்பற்றத்தக்க வலுவான நீதிகளை அவர் போதிப்பதால் ஏனையவர்கள் பின்பற்றக்கூடிய முன்மாதிரி சன்றோனாக குரு விளங்குகிறார்.

பல்வேறு மதங்களில் விதந்துரைக்கப்படுவது போல் இந்து மத குருமாரும் ஆசிரியரின் மூவகைப் பணிகளை மேற்கொண்டனர்.

❖ அறிவைப் பரப்பும் நோக்கில் அன்புரிமையுடன் தனது சீடர்களுக்கு உதவுதல்.

❖ கற்கும் எல்லா விடயங்களையும் நினைவில் வைத்துக் கொள்ளும் நினைவாற்றலைத் தூண்டி விடுதல்.

❖ ஆன்மீகப் பயணத்திற்கு வழிகாட்டுவதோடு தானறிந்த எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வதன்மூலம் தனது மாணவர்களை நெறிப்படுத்துதல்.

மாணவர்கள் குருவை நம்ப வேண்டும்; குருவின் வாழ்க்கையுடன் ஐக்கியப்பட வேண்டும்; அப்போதுதான் குருவானவர் காட்டுகின்ற எண்ணங்களின் விரிவாக்கத்துக்கு உதவக்கூடிய பல்வேறு வழிமுறைகளையும் மாணவர்கள் விளங்கிக் கொள்ள முடியும் என்று புராதன காலத்தில் நம்பப்பட்டது. ஆவி, மனம், உணர்வு, குரல், மூச்சு, அரவணைப்பு போன்ற எல்லாவற்றினாலும் குரு கற்பிப்பதால் மாணவர்களிடம் தன்னம்பிக்கை வளரலாயிற்று.

வெளிப்படையான சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டவராக குரு விளங்கினார். இதனால் அதியுயர்ந்த நல்லெண்ணங்களின் இலக்கணமாக குரு மதிக்கப்பட்டார்.

**மேலை நாடுகளின் புராதன ஆசான்கள்**

உலகச் சிந்தனையின் தந்தையராக பிளேட்டோ, சோக்கிரடீஸ், அரிஸ்ரோட்டில் போன்றவர்கள் மதிக்கப்பட்டு வருகின்றனர். உலகின் உன்னத ஆசான்கள் அவர்களே.

ஆசிரியர்கள் அக்காலத்தில் ஏற்கனவே சொல்லப்பட்ட கோட்பாடுகளைக் கற்பிப்பதில்லை; சொல்லப்பட்டவற்றின் உண்மைத்தன்மையையே ஆராய்ந்தனர். இதில் குருவுக்கும் சீடனுக்கும் உடன்பாடு ஏற்படுமிடத்து மாத்திரம் நடைமுறைகளுக்கு ஏற்ப பொதுமக்களின் ஒப்புதலை பெற்றுக் கொள்ளும். இத்தகைய சுதந்திர போக்கு தெளிவாக இருந்தமையால் அக்காலத்தில் "முறைமை" (Formal) எதுவும் பின்பற்றப்படவில்லை.

சோக்கிரடீஸ் எழுதுவதைக் கண்டு பிடித்ததையும் அதனால் புத்தகங்கள் உருவாவதையும் வெளிப்படையாக ஏற்கவில்லை. வாசிப்பவன் தனது சந்தேகங்களை புத்தகங்களிடம் கேட்க முடியாது என்றும் தொடர்பற்றவர்கள் கைகளிலும் அது வாழ வேண்டியேற்பட்டு விடும் என்றும் விவாதிக்கிறார் சோக்கிரடீஸ். எழுதப்பட்ட எந்தவொரு உண்மையையும் உண்மைதான் என்று சொல்வதற்கு தகுதியுடைய ஆசிரியர் தேவை; உண்மைகள் எவரிடம் சொல்லப்படுவது சரியானது என்பதை ஆசிரியர் ஒருவனாலேயே உணர முடியும்; உண்மையை எவ்வாறு சொல்லிக் கொடுப்பது என்பதையும் எதிர்க்கருத்து எழும்போது அதற்கு எவ்வாறு விளக்கமளிப்பது என்பதையும் ஆசிரியரே அறிவார். நூல்களினால் இவற்றையெல்லாம் செய்ய முடியாதென்றும் ஆசிரியரது அங்கீகாரமில்லாது அறிவு சார் உண்மைகள் வாழ முடியாது என்றும் விவாதிக்கிறார் உலகின் அறிவுச்சுமை தாங்கிய சோக்கிரடீஸ்.

எழுதாமல், கற்பிக்காமல் உலக ஆசானாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் சோக்கிரடீஸ். பிளேட்டோவுக்கு முந்திய கிரேக்க சிந்தனையின் அவதாரமாக அவர் நோக்கப்பட்டார்.

எதிர்காலத்திற்கான வரும் பொருள் உரைப்பவனாகவும் உண்மைகளை ஏற்றுக்கொள்ளும் வகையில் எடுத்துச் சொல்லும் வல்லமையுடையவர்களதும் ஆற்றல் மிக்கவர்களதும் சமுதாயப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்பவர்களுமே உண்மையான ஆசிரியர்களாக கிரேக்கப் பண்பாடு கருதியிருந்தது. சிறந்த ஆசிரியர் என்பவன் உண்மைகளையும் பரிமாறும் சமுதாயப் பொறுப்பு மிக்கவனே. தத்துவச் சிந்தனையின் ஒழுங்கான தொடர்பை வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்கவர்களே சிறந்த ஆசிரியர்களாயிருந்தனர்.

ஆசிரியர்களுடன் இணைந்து உண்மைகளை தர்க்கிப்பவர்களாகவே மாணவர்கள் விளங்கினர். "கற்றுக் கொள்வதற்குரிய உன்னதமான வழிமுறை கற்றுக்கொள்ள முயல்வதுதான்" என்று உரோமானியர்களும் நம்பி வந்தனர். உண்மைகளை எடுத்துச் சொல்லும் நிலையங்களே கல்விக்கூடங்களாக ஹெகலின் நூல்களின் விபரிக்கப்பட்டிருந்தன.

மானுட ஆசான்களின் உள்ளத்தில் தேவன் (கடவுள்) இல்லாவிடின் உண்மைகள் நுழைய முடியாது. உண்மைகளை ஒப்புக்கொள்ளும்படி எடுத்துச் சொல்லும் ஆற்றல் அப்போதுதான் ஆசிரியருக்கு வருவதாக புனித அகஸ்டின் விளக்கமளித்தார். உண்மைகளை தமக்குள்ளேயே தத்துவ விசாரணை செய்து கொள்வதற்கு ஆசிரியர்களின் உள்ளத்தில் தூய்மை மற்றும் உண்மைத்தன்மை நிலவ வேண்டும். அத்தகைய தூயவான்களின் உதவியில்லாமல் சீடர்கள் கற்றுக் கொள்வது சாத்தியமில்லை. பதினோராம் நூற்றாண்டுகளின் தத்துவங்கள் இவற்றைத்தான் சொல்ல முற்பட்டிருந்தன.

**தொலைந்து போக விரும்பும் நூலாசிரியர்கள்**

தாங்கள் எழுதுவதை தம்முடையதென்று வெளிப்படுத்த விரும்பாத ஆசிரியர்கள் அன்றும் இருந்தனர். தம் பெயரில்லாமல் நூல்களை வெளியிடுதல் அல்லது புனை பெயரினுள் ஒளிந்து கொண்டு தமது கருத்துக்களை சொல்லும் ஆசிரிய மரபு பண்டைக் காலத்திலும் இருந்திருக்கின்றது.

தனது கருத்துக்களும் போதனைகளும் அக்காலத்து மத நிறுவனங்களின் போதனைகளுக்கு முரணாக அமைந்தபோது தான் தண்டிக்கப் படக்கூடும் என்று பயந்து தனது பெயரை தான் எழுதிய "டிராக்டாட்டஸ் தியோலஜி கோ பொலிடிகஸ்" என்ற நூலில் ஸ்பினோஸா என்ற ஆசிரியர் குறிப்பிடவில்லை. தமது கருத்துக்கள் சமுதாயத்துக்கு சொல்லப்பட வேண்டும் என்ற ஆசை இருந்த போதிலும் ஆசிரியர் ஒளிந்து கொண்டார். அவரது முதல் எழுத்துக்களுடன் பல நூல்கள் அவரால் வெளியிடப்பட்டன. புகழ் மீது நாட்டம் கொண்டவர்களே நூல்களில் தமது பெயர்களைப் பொறித்ததாகவும் கருதப்பட்டது.

மா.சின்னத்தம்பி
பேராசிரியர்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

பதினாறாம் நூற்றாண்டிலும் தணிக்கை முறைக்குப் பயந்தும் சிறைத் தண்டனைகளுக்கு அஞ்சியும் பலர் தமது நூல்களில் தம் பெயர்களைக் குறிப்பிடவில்லை. நீதிமுறைக்கு சவால் விடும் மாற்று உத்தியாகவும் அக்கால ஆசிரியர்கள் பெயர் சொல்லாது தாமாக தொலைந்து போனார்கள்.

திருட்டுத்தனமான நூல்களும் ஆசிரியர் பெயர் இல்லாமல் வெளிவருவதை வரலாற்றுக் காலத்திலிருந்து பார்க்க முடிகின்றது. இன்றும் பார்க்க முடிகின்றது.

"புதிய தொடர்பால் சாதனங்களூடாக உண்மைகளை சமுதாயத்தில் பரப்ப முடியும்" என்ற நிலைமை இப்போது வளர்கின்ற போது ஆசிரியர் - மாணவன் என்ற உணர்வுபூர்வமான உறவும் ஒதுக்கித் தள்ளப்படுகின்றது.

இவை இக்காலத்தை- கால ஓட்டத்தை உணரச் செய்கின்றனவோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகரக்கூடாரங்களிலிருந்து விமோசனம் கிடைக்குமா..?

## வன்னியில் மீளக்குடியேறிய மக்கள் மூன்றாண்டுகள் கடந்தும் துயரத்தில்

### கிளி.அழகாபுரி கிராமம்-தரிசிப்பு

தமிழ்மாறன்

அண்மையில் கிளிநொச்சி நகருக்கு வந்தார் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. 284 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட கிளிநொச்சி சந்தைக்கான கட்டிடங்களை திறந்து வைத்தார். கிளிநொச்சி நகரமெங்கும் இப்பொழுது மகிந்த ராஜபக்சவின் பிரசார சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இச்சுவரொட்டிகள் அழகாபுரிக் கிராமம்வரை நீளுகின்றன.


அந்தக் கிராமத்துமக்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைவிட, அந்த மக்கள் மத்தியில் எப்படி பிரசாரம் செய்யலாம் என்ற அரசியல் நோக்கத்தோடு அரசாங்கம் செயற்படுவது தெரிகிறது. போருக்குப் பின்னரான வன்னி அவலம், கொடுமை மிகுந்த வாழ்க்கையாக காட்சியளிக்கிறது இந்த கிளிநொச்சி அழகாபுரிக்கிராமம்.

கிளிநொச்சி மாவட்டம், இராமநாதபுரம் அருகில் உள்ளது அழகாபுரிக்கிராமம். இந்தக் கிராமத்திற்கு அருகில்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானநிலையம் ஒன்றும் இருந்தது. இராமநாதபுரத்திலிருந்து அழகாபுரிக் கிராமத்துக்குச் செல்லும் வழி விடுதலைப்புலிகளின் கோட்டையாக இருந்த அம்பலகாமம் வரை செல்கிறது. விடுதலைப் புலிகளின் விமானத்தளம் தற்பொழுது இலங்கை அரசின் விமானத் தளமாகிவிட்டது. வழியெங்கும் விமானத் தளத்திற்குச் செல்வதற்கான பாதை என்ற வழிக் குறிகாட்டி பொருத்தப்பட்டிருக்கிறது. அத்தோடு அடிக்கு அடி தொண்டு நிறுவனங்களின் அபிவிருத்தி முன்வரைபு பெயர்ப்பலகைகளும் நடப்பட்டிருக்கின்றன.

கண்ணுக்குத் தெரியும் இடங்களில் எல்லாம் தகரக் கூடாரங்கள்தான் காட்சியளிக்கின்றன. பார்த்தால் ஒரு அகதி முகாமைப்போல இருக்கிறது அழகாபுரிக்கிராமம். மீள்குடியேற்றத்தின் மூலமும் ஒரு தடுப்பு முகாமைத்தான் உருவாக்க முடிகிறது. பழைய வாழ்வை மீட்க முடிவதில்லை என்ற யதார்த்தம் இக்கிராமத்தின் காட்சிகளில் தெரிகிறது. தற்காலிக வீடுகளின் அரசியல் என்று ஒரு விடயம் வன்னி மக்களின் வாழ்க்கையைக் கருக்கிக் கொண்டிருக்கிறது. வன்னியின் பெரும்பாலான கிராமங்கள் இப்பொழுது அந்த தற்காலிக வீடுகளினால்தான் நிரம்பியுள்ளன. ஆனால், தற்காலிக வீடுகள் எப்படியானவை? என்கிற விடயம் இன்று பேசப்படாத ஒரு அவல அபிவிருத்தியாக இருக்கிறது, உண்மையில் அதிர்ச்சி தரக்கூடியது. ஏனெனில் வன்னி மக்களின் நலன்களை அரித்துக் கொண்டிருக்கும் கறையான்களாக மாறியிருக்கின்றன தற்காலிக கூடாரங்கள்.

கொடும்போர் மூலம் வீடுகளை அழித்த இலங்கை அரசு, மீள்குடியேறும் மக்களுக்கு சில மீற்றர்கள் அளவேயான தறப்பாள்களையே வழங்குகின்றது; ஒரு சில நாட்களில் தற்காலிக கூடாரங்கள் அமைத்துத் தரப்படும் என்று சொல்லுகிறது. தறப்பாள் கூடாரத்திலிருந்து தற்காலிக கூடாரத்தை சென்றடையவே ஆண்டுக்கணக்கில் ஆகிறது. தறப்பாள்களில் நிம்மதி இல்லாத, கொடுமை மிகுந்த வாழ்வை கடந்த மக்கள், தகரக் கூடாரங்கள் எனப்படும் தற்காலிக கூடாரங்களில் மற்றொரு துயரமான வாழ்க்கைக்குள் அடைக்கப்படுகிறார்கள். இத்துயர அடைபே சாதனை மிகுந்த கூடாரங்களாக்கப்படுகிறது.

அழகாபுரிக்கிராமத்தில் மொத்மாக 162 குடும்பங்கள் வசிக்கின்றன. 1993 ஆம் ஆண்டு பல்வேறு இராணுவ நடவடிக்கைகளால் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் இந்தக் குடியிருப்பில் மக்கள் வந்து சேர்ந்தார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரரான மிதுலன் என்பவரின் பெயரில் இக்குடியிருப்பு இடம்பெயர்ந்த மக்களுக்காக உருவாக்கப்பட்டது. தொடர்ச்சியான படை நடவடிக்கையால் உருவான இந்தக் குடியிருப்பில் போரினால் 162 குடும்பங்களில் பத்துக் குடும்பப் பெண்கள் விதவைகளாக்கப் பட்டிருக்கிறார்கள். இருபது பெண்கள் பல் வேறு சூழ்நிலைகளால் கணவர்களால் கைவிடப் பட்டிருக்கிறார்கள். எந்த மக்களைப் பார்த்தாலும் சொத்திழந்து ஏதுமற்ற ஏழைகளாகியிருப்பது தெரிகிறது.



இந்த மக்கள் வாழும் தகரக் கூடாரங்கள் மிகவும் கொடியவை. இந்தத் தகரக் கூடாரங்களிலான தற்காலிக வீடுகளைப் பெறுவதற்கே கடுமையாக போராட வேண்டியிருந்ததாக இந்தக் கிராமத்தின் தலைவர் வேலுப்பிள்ளை வில்வரத்தினம் குறிப்பிட்டார். அந்தக் கிராமத்திற்குச் செல்லும்பொழுது மதிய நேரம் கடுமையாக வெயில் அடித்துக் கொண்டிருந்தது. குழந்தைகளும் முதியவர்களும் மரங்களுக்குக்கீழ் படுத்திருந்தார்கள். சில கர்ப்பிணித் தாய்மார்களும் கூடார வெம்மை தாங்க முடியாமல் துடித்தபடி வெளியில் நின்றார்கள் பகலில் வெயில் தகரங்களை சூடேற்றி அவிக்கிறது. இரவில் அடங்கும் வெம்மை தகரக் கூடாரத்தில் கொதிக்கிறது. நாங்கள் இரவிலும் வெளியில் புழுதியில் தான் கிடக்கிறோம் என்று கிராமத்தின் மக்கள் சொல்கிறார்கள்.

தற்காலிக கூடார அவலம் குறித்து மக்கள் கொந்தளிக்கும் பொழுதெல்லாம் இந்திய வீட்டுத்திட்டம் வரும் என்று இந்தியாவின் பக்கம் கையை காட்டுகிறார்கள் அரச அதிகாரிகள். இந்திய வீட்டுத்திட்டம் பற்றி ஒரு முடிவும் இல்லை என்று சொல்லுகிறார் இக்கிராமத் தலைவர் வில்வரத்தினம். இக்கிராமத்தில் *சேர்.ஆர்.* நிறுவனம் எண்பத்தொரு தற்காலிக வீடுகளையும் *வேல்ட் விசன்* நிறுவனம் முப்பது தற்காலிக வீடுகளையும் *என். ஆர். சி.* நிறுவனம் எட்டு தற்காலிக வீடுகளையும் கட்டிக் கொடுத்திருக்கிறது. தொடர்ச்சியாக ஏ.ஜி.ஏ.வுடன்கதைக்கிறம். தற்காலிக வீட்டுத்திட்டம்தான் நடக்கிறது. இந்த தற்காலிக வீடுகளையே [illegible] எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்று வில்வரத்தினம் பெருமூச்சோடு குறிப்பிட்டார்.

தேர்தலுக்கும், முன்பள்ளித் திறப்பு விழாவுக்கும் வந்த அரசியல்வாதிகள் இக்கிராமத்தில் வாக்குறுதிகளை அள்ளி வீசினார்கள் அதற்குப் பிறகு இந்தக் கிராமத்தின் பக்கம் அவர்கள் வரவேயில்லை. தமிழ் அரசியல்வாதிகள் யாரும் வந்து நிலமையைக்கூட பார்க்கவில்லை என்று இக்கிராம மக்கள் குமுறுகிறார்கள். சில தொண்டு நிறுவனங்கள் இந்தக் கிராமத்தின் பின்தங்கிய நிலையை கண்டு சிலபொதுவான வேலைகைள செய்திருப்பது வரவேற்கப்பட வேண்டியது. அதுவே ஓரளவு இந்த மக்கள் தங்கள் துயரங்களை தணிக்க உதவியிருக்கிறது.

தொண்டு நிறுவனமான சோஆ நிறுவனம் மூன்று பொதுக்கிணறு திருத்திக் கொடுத்திருக்கிறது. அத்தோடு சோஆ நாற்பத்தைந்து மலசலகூடத்தையும் அமைத்துக் கொடுத்திருக்கிறது. வேல்ட் விசன் முப்பது மலசலகூடங்களையும் என்.ஆர்.சி. எட்டு மலசலகூடங்களையும் கட்டிக் கொடுத்திருக்கிறது. வெட்ட வெளியில் போடும் வீடுகளில் எப்பிடி மக்கள் வாழ்வது? மரங்கள் ஏதும் இல்லாத இடங்களில் பல வீடுகள் போடப்பட்டுள்ளன என்று கிராமத்தலைவர் வில்வரத்தினம் குறிப்பிட்டார்.

நாங்கள் நாளாந்தம் தேங்காய் பிடுங்கி, சந்தைக்குப்போய் தராசு பிடிச்சு கூலி வேலைக்குப் போய்த்தான் சாப்பாடு சாப்பிடுறம் என்கிறார் இக்கிராமத்தின் முதியவர் ஒருவர். இக்கிராமத்தில் உள்ள முன்னாள் போராளிகளின் நிலைமையும் கடும் மோசமாக இருக்கிறது. தடுப்பால் வந்தவர்களுக்கு எந்தவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை. சிலபேருக்கு விசாரணைகள் நடைபெற்றுள்ளன. அண்மையிலும் விசுவமடுவுக்கும் சிலர் அழைத்துச் செல்லப்பட்டார்கள். தங்களுடன் வேலை செய்ய வேண்டும் என்று இராணுவத்தினர் வற்புறுத்துகின்றனர் முன்னாள் போராளிகளோ மறுத்துவிட்டார்கள்.

இஞ்ச கனபேரின் வீடு மலசல குடத்தின் ஃபிற்றுக்கள் எல்லாம் வெடித்து [illegible] வெடித்துவிட்டது. நாங்கள் [illegible]டால், தற்காலிக வீடுதானே என்றும் சொல்லுகினம். ஆனால், இதுக்குள்ளதானே நாங்கள் இருக்க வேணும். இந்த வீட்டுக்குக்குப் போட்ட சோத்தித்தடி உக்கீட்டுது. இங்குள்ள 30 வீடுகள் மாத்திரம் சோத்தி மரத்தில் போடப்பட்டுள்ளன. இப்பவே சுவரிலும் தடிகளிலும் கறையான் ஏறுது. இப்ப இருக்கிற நிலைமையைப் பார்த்தா 3 மாதத்தில வீடு சரியும் போல கிடக்குது. மிகவும் பலவீனமான தற்காலிக வீடுகள் குறித்து சின்னத்துரை லோகராசா குறிப்பிட்டார்.

நான் ஒரு நிறைமாதக் கற்பிணி, இந்த வீட்டுக்குள்ள இருக்க ஏலாமல் மரத்துக்கு கீழ வந்திருக்கிறன் என்று குறிப்பிட்டார் தங்கராசா சுகிர்தா. இதுக்குள்ள எப்படி இருக்கிறது? சரியான கஷ்டம்; தறப்பாளுக்குள்ள இருந்து இதுக்குள்ள வரவே வருசக் கணக்காகிட்டுது. இந்தியன் வீட்டுத் திட்டம் தாறம் என்டு பதிந்திருக் கிறார்கள்; பார்ப்பம் என்று எதிர்பார்ப்போடு வாழ்ந்து கொண்டிருக்கும் சுகிர்தா குறிப்பிட்டார்.

*சிப்போட்டுகள்* மழையில் ஊறினால் பிய்ந்துபோய்விடும் வெயில் நேரத்தில் வெளியில் வந்துதான் இருக்கிறம் என்று சொன்னார் மூன்று பிள்ளைகளின் தாயான கண்ணன் சிந்துஜா. வீட்டுக்குள் இருக்க ஏலாது மரத்திற்கு கீழே தறப்பாள் இழுத்துக் கட்டிப்போட்டு இருக்கிறம். மாரிக்கு துப்பரவாய் இதுக்குள்ள இருக்க ஏலாது. என்ன செய்யப்போறமோ என்று மழைக்காலம் பற்றிய கேள்வியோடு குறிப்பிட்டார் சிந்துஜா.

இந்தக்கிராமத்தில் பெரிதும் மனங்களை உலுப்புபவர்கள் விதவைகளும் தகப்பனற்ற குழந்தைகளுமே. ஆனால், பலமும் திடமும் கொண்டவர்கள் இக்கிராமத்தின் பெண்கள் அதில் ஒருவர்தான் இந்த மணியம்மா. எனது கணவர் ஐந்து குழந்தைகளுடன் கைவிட்டுச் சென்று விட்டார் என்றார் இம்பெண்ணான மணியம்மா சிவகுமார். தினமும் கூலி வேலைக்குச் சென்றுதான் எனது பிள்ளைகளைப் பார்க்கிறேன் நான் இருக்கிற நிலைமையில் இந்த வீடு ஒன்டுதான் தஞ்சம் இதற்குள்ளதான் நாங்கள் இருந்தாக வேண்டும். எங்களால உழைச்சு ஒரு குடிசைகூட போட ஏலாது ஆனால், இந்த வீடு எத்தனை நாளைக்கு தாங்கும் என்றுதான் தெரியல்ல என்று பேசினார் மணியம்மா.

தற்காலிக கூடாரங்களில் வாழ்வதனால், பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறார்கள் மக்கள். முக்கியமாக குழந்தைகளையும் முதியவர்களையும் கடுமையாக பாதிக்கிறது. சில முதியவர்கள் இந்தக்கிராமத்தில் அடுத்தடுத்து இறந்து போனார்கள். இந்தப்பதிவை எழுதுவதற்காக சென்ற பொழுதும் இக் கிராமத்தில் நோயால் இறந்த ஒருவரின் மரணவீடு நடந்து கொண்டிருந்தது. நோயாளிகள் வாழமுடியாது. ஆரோக்கியமானவர்களை நோயாளியாக்கிறது இந்தக் கூடாரங்கள். இந்தக் கூடாரங்கள்தான் இலங்கை அரசின் வசந்த கால கூடாரங்கள்.

இந்த மாதிரிக் கதைகள் சகஜமானவை என்று சொல்லுகிறார்கள் அரச அதிகாரிகள். கூரையற்ற தேசத்தில் கைவிடப்பட்ட மக்களின் எல்லா அதிகாரங்களையும் பலத்தையும் இடத்தையும் சொத்தையும் யுத்தத்தின் மூலம் பிடுங்கிவிட்டார்கள். இப்பொழுது வீடில்லை, வாழ்வில்லை, உறவில்லை என்ற எதுவுமற்ற நிலையில் வாழும் வன்னிச் சனங்களில் அழகாபுரிச் சனங்களும் அடங்குகிறார்கள். எந்த நேரமும் அறுந்து போகும் நூல்மீது நடந்து கொண்டிருக்கிறார்கள் வன்னிமக்கள். ஆனால், இந்த மக்கள் வசந்தகாலத்தில் வாழ்கிறார்கள் என்று அரசு சொல்லிக் கொண்டிருப் பதுதான் அவலத்திலும் அவலம்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனிதனுடைய வரலாற்றைக்கூறும் வேதாத்திரிய தத்துவம்


வாழ்க வையகம் வாழ்க வேதாத்திரியம் வாழ்க வளமுடன் வேதாத்திரி மகிமையின் முழுமை நல வாழ்வுக்கான யோகா

வேதாத்திரியம் என்பது என்ன?

கடந்த 50 ஆண்டுகளில் விஞ்ஞானம் அதிவேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது. அதனால் சமுதாயத்தில் வாழ்க்கை வளங்கள் பெருகிவிட்டன. இயற்கையில் வளமாக இருந்ததை வாழ்கை வளங்களாக மாற்றிக் கொடுத்துள்ளது விஞ்ஞானம். எனினும் வாழ்க்கை வளங்கள் பெருகிய அளவிற்கு மனவளம் பெருகவில்லை. மன வளத்தை விஞ்ஞானத்தால் ஏற்படுத்த முடியாது. மனிதன் தனது சிந்தனை வளத்தால் தான் மனவளத்திற்கான வழிகளைத்தேடி அதன்படி வாழ முடியும்.

பெரும்பாலும் மனித சமுதாயத்தில் அறியாமை, அலட்சியம், உணர்ச்சி வயப்பட்டநிலை ஆகிய மூன்றில்தான் துன்பங்கள் பெருகுகின்றன. உலகில் எந்தப் பகுதியிலுமே பாதுகாப்பற்ற அறவழியில்லாத வாழ்க்கையைத்தான் (insecured Life) வாழ வேண்டியுள்ளது. பொருள் உள்ளவனுக்கும் (செல்வந்தன்) அமைதியில்லை. பொருள் இல்லாதவனுக்கும்(ஏழை) அமைதியில்லை.பொருள் இல்லாதவனுக்கு அமைதியில்லை என்பதில்கூட நியாயம் உள்ளது. ஆனால், பொருள் உள்ளவனுக்கு ஏன் அமைதியில்லை? இதில் என்ன நியாயம் உள்ளது? அந்த நிலை அவனாலேயே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதுதான்.

உலகில் வறுமை,பட்டினி, போர், தீவிர வாதம், குடும்பச் சிக்கல்கள், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பொய், சூது, சாதிமத பேதங்கள், வேலையின்மை போன்ற சீரழிக்கக்கூடிய செயல்கள் மனிதர்களாலேயே செய்யப்பட்டு தலைமுறை தலைமுறையாயக சங்கிலித்தொடர் போல் பெருகி விட்ட நிலையில் அதிலிருந்து மீள்வதற்கு வழி தெரியாமல் மனித சமுதாயம் தவித்துக் கொண்டுள்ளது.



எவ்வளவு காலம் இப்படி அறவழியற்ற வாழ்க்கை வாழ்வது? அதற்கு விடிவு காலம் கிடையாதா? என்று பலர் எண்ணத் தொடங்கி விட்ட தருணத்தில்தான் வேதாத்திரியம் தோன்றியுள்ளது.

மனிதகுலம் நெறியுடன் வாழ்வதற்குக் கீதை, பைபிள், குர்ஆன் ஆகிய புனித நூல்கள் தோன்றின. தோன்றிய காலத்தில் தான் வித்தியாசம். ரோஜாப்பூவை எந்தப் பெயர் இட்டு அழைத்தால் என்ன? மலராமலா போய்விடும்! அது போலத்தான் தற்போதுள்ள சமுதாயச் சிக்கல்களுக்குத் தீர்வுகளாக நெறியுடன் வாழ வழிகளைச் சொல்கிறார் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள். வேதாத்திரியம் என்பது தனிப்பட்டவருக்கோ தனிநாட்டவருக்கோ தனிமதத்தினருக்கோ சொந்தமில்லை. ஒட்டுமொத்த உலக சமுதாயத்திற்கே சொந்தம்.

மனித சமுதாயம் தற்பொழுதுள்ள நிலையிலிருந்து மேம்படவும் அமைதியாக வாழவும் சிந்தனையே மூச்சாகக் கொண்டுள்ள வேதாத்திரி மகரிஷி அவர்கள் சிந்தித்தன் விளைவக மலர்ந்த கருத்துக்களின் தொகுப்பே "வேதாத்திரியம்" எனப்படுகிறது. இதுசாதி, மத, நாடு பேதமின்றி உலக மக்கள் அனைவருக்குமே பொருந்துவதும் பொதுவானதுமான வாழ்க்கை நெறி.

வேதாத்திரிய தத்துவம் மனிதனுடைய வரலாற்றைத்தான் சொல்கிறது. தம் கதையினைத் தாமே தெரிந்து கொள்வதில் மனிதர் அனைவருக்கும் ஆர்வம் இருக்கத்தானே செய்யும். வாருங்கள் அறிந்து விழித்துக் கொள்வோம். எம்மை மாற்றிக் கொள்வோம். ''தன்னையறிய தனக்கொரு கேடில்லை'' யோகமான வாழ்க்கை வாழ்வோம். தொடர்ந்து யோகம்/யோகா தொடர்பில் ஆராய்வோம்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு ஏற்றுக் கொள்ள முடியாது

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் பங்கேற்கப் போவதில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் மீண்டும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்கப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரையில் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதில்லை.

பகுதி அளவில் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஒருசில பாடங்களுக்கு மட்டும் விடைத்தாள் மதிப்பீடு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது. சகல பாடங்களுக்குமான விடைத்தாள் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விடைத்தாள் மதிப்பீடுகளில் ஈடுபடுவதாக ஒரு சில பேராசிரியர்கள் அறிவித்துள்ளனர்.

எனினும் முழுமையான அளவில் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடந்த 2011 இல் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டிலேயே பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக் கொள்வர் என பேராசிரியர் சங்கத்தின் துணைத் தலைவர் தம்பர அமிலதேரர் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கப் போராட்டம் நீடித்தால் இது மேலும் காலதாமதமாகக் கூடும். புதிதாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு முன்னதாக இறுதியாண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருக்கும் காலத்திற்கு சமமான காலம் கல்வி நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும். கோரிக்கைகளுக்கான அர்ப்பணிப்புடன் போராடப் போவதாகவும் அதற்காக உயிரையும் தியாகம் செய்யத் தயார். (அ-2)

# நிறைவேற்று அதிகார ஆட்சியின் தாக்கம் குறித்து ஐ.தே.க.தற்போது உணரும்

## கருஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வாதிகார வெறியில் செயற்படும் அரச நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு மாற்றாக நாடாளுமன்ற ஜனநாயக அரசாங்கம் ஒன்றை கட்டியெழுப்பும் செயற்பாடுகள் தற்போது ஆரம்பமாகி விட்டதை அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் ஊழல் மோசடிகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் வல்லுறவுச் சம்பங்கள் அதி கரித்துள்ளமை தெளிவுபடுத்தியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரி வித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

18 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள அதீத அதிகாரங்களினால் சூழப்பட்ட தனி நபர் தனிக்கட்சி ஆட்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது.

நாட்டில் இடம்பெறும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் மோசடிகளில் அரசாங்கத்தின் பிரதேச அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

நீதித்துறையில் தலையீடுகளை மேற்கொள்வதன் மூலம் சர்வாதிகாரம் தானாகவே தோன்றிவிடும். அரசாங்கத்திற்கு எதிராக கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கு எதிராக அரச ஊடகங்களை பயன்படுத்தி அவதூறு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவர்கள் மீது விடுதலைப் புலிகள் என்ற முத்திரை குத்தப்படுகிறது அல்லது தேசத்துரோகி என்ற முத்திரைகுத்தப்படுகின்றது. இதனை அரசாங்கம் தனது வாடிக்கையாக கொண்டுள்ளது.

சர்வாதிகார ஆட்சியாளரின் கைகளுக்கு அனைத்து அதிகாரங்களும் சென்று ஏற்படும் விபரீதங்களை நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சி தற்போது நன்குணர்ந்து கொண்டுள்ளதாகவும் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (அ-2)

## மாகாணத்தில் முதலாமிடம்



யா/இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலய மாணவி கிறிஷ்ஷிக்காநானேஸ்வரன் கிறிஸ்ரி (தரம் 13) தனி நடிப்புப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். (அ-9)

# வவுனியா தெற்கு வலயத்தில் உளநல தின வாரம் அனுஷ்டிப்பு

(பூந்தோட்டம்)

சர்வதேச உளநல தினம் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தினால் பாடசாலை மட்டத்தில் உளநல தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலை மாணவர்களின் உள நலத்தை மேம்படுத்தும் வகையில் வைத்திய கலாநிதிகளின் விரிவுரைகளும் தமிழருவி த. சிவகுமாரனின் சொற்பொழிவுகளும் இடம்பெற்று வருவதுடன் பல பாடசாலைகளில் சிறுவர்களின் ஆக்க செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் சகபாடி ஆதரவு குழுக்களின் கலந்துரையாடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி அன்னமலர் தலைமையில் இடம்பெற்றதுடன் நேர்ப்பாங்கான நடத்தைகளுக்கான முகாமைத்துவம் எனும் தொனிப்பொருளில் உளநல மருத்துவர் வைத்திய கலாநிதி எஸ். சிவதாசின் கருத்தரங்கும் உணர்வுகளை கையாளுவதனூடாக திறன்விருத்தி எனும் தொனிப்பொருளில் உளநல மருத்துவர் வைத்திய கலாநிதி சுதாகரனின் கருத்தரங்கும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9-266)



இலங்கை வங்கி சுன்னாக கிளையின் விசேட கருமபீடம் அண்மையில் மருதனார் மடத்தில் அமைந்துள்ள மாகாணக் கல்விப் பணிமனையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கை வங்கி உதவிப்பொது முகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறி, வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரா, வடமாகாண விளையாட்டுத் துறைபணிப்பாளர் எஸ். அண் ணாத்துரை ஆகியோர் இணை ந்து நாடாவெட்டி திறந்து வைப் பதையும் சிங்களப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கப்புக்கொட மங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

241

## இளவரசனின் வீரம்

மகதநாட்டை அரசன் ஒருவன் ஆண்டுவந்தான். பல ஆண்டுகளுக்குப் பின்பு அவனுக்கு ஒரு மகன் பிறந்தான்.

இளவரசன் பிறந்ததையறிந்த மக்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். நாடே விழாக்கோலம் பூண்டது.

ஆண்டுகள் சில சென்றன. இளவரசன் கல்வி கற்கும் பருவம் அடைந்தான். புகழ்பெற்ற ஆசிரியர் ஒருவர் தட்சசீலத்தில் இருந்தார். அவரிடம் கல்வி கற்பதற்காக இளவரசனை அனுப்பினார்கள்.

அவனும் அங்கே சென்று அவரிடம் ஆர்வத்துடன் கல்வி கற்றான். எல்லாக்கலைகளிலும் தேர்ச்சிபெற்றான்.எதற்கும் அஞ்சாத மாவீரனாக விளங்கினான்.

அவனிடம் ஆசிரியர் உன் கல்வி நிறைவு பெற்றுவிட்டது. நீ புகழுடன் விளங்குவாய். உன் நாட்டிற்குச் செல் என்றார்.

அவரை வணங்கிவிடை பெற்றான் அவன். மகத நாட்டை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

வழியில் பெரிய காடு ஒன்று இருந்தது. அதற்குள் செல்ல முயன்றான் அவன்.

அங்கிருந்த சிலர் அவனைத் தடுத்தார்கள்.

இளைஞனே! உள்ளே செல்ல வேண்டாம். இந்தக் காட்டில் ரோமக்கௌவி என்ற பூதம் உள்ளது. காட்டிற்குள் செல்ப வர்களை எல்லாம் கொன்று தின்கிறது. அதனிடம் தப்பிப் பிழைத்தவர் யாரும் இல்லை என்றார்கள்.

நான் எதற்கும் அஞ்சாத வீரன். என்னிடம் வில், அம்புகள், வாள், ஈட்டி உள்ளன. நான் அந்தப் பூதத்திற்கு அஞ்சமாட்டேன். என் எதிரில் வந்தால் அதைக் கொல்வேன் என்றான் அவன்.

இளைஞனே! எந்த ஆயுதமும் அந்தப்பூதத்தின் உடலுக்குள் நுழையாது. அதன் உரோமத்திற்குள் சிக்கிக்கொள்ளும். நாங்கள் சொல்வதைக்கேள். ஆபத்தான முயற்சியில் இறங்க வேண்டாம் என்று தடுத்தார்கள் அவர்கள்.

ஆனால் அவனோ அவர்கள் பேச்சைக் கேட்கவில்லை. காட்டிற்குள் சென்றான்.

அவன் எதிரில் பயங்கரமான தோற்றம் உடைய பூதம் ஒன்று வந்தது.

கரடிபோல அதன் உடலெங்கும் முடி அடர்ந்து இருந்தது. பருத்திருந்த அது பனை மர உயரத்திற்கு இருந்தது. அதன் பற்கள் யானைத்தந்தங்களைப் போல இருந்தன.

அவனைப்பார்த்த பூதம் இளைஞனே உடனே இங்கிருந்து ஓடினால் உயிர்பிழைப்பாய். இல்லையேல் உன்னைக் கொன்று தின்பேன் என்று மிரட்டியது.

சிறிதும் அஞ்சாத அவன் பூதமே நான் செல்லவழிவிடு. உன்னை உயிருடன் விடுகிறேன். என் வழியில் குறுக்கிட்டால்



உன்னைக்கொன்று போடுவேன் என்று பதிலுக்கு மிரட்டினான்.

இதைக்கேட்ட பூதம் காடே அதிருமாறு சிரித்தது. என்னையே மிரட்டுகிறாயா? இனி யாரும் உன்னைக்காப்பாற்ற முடியாது என்று அவனை நோக்கி அடியெடுத்து வைத்தது.

விரைந்து செயற்பட்டான் அவன். தன் வில்லில் அம்பு பூட்டினான். பூதத்தின் மார்புக்குறி வைத்து எய்தான்.

வேகமாகச் சென்றது அம்பு. அதனால் பூதத்தின் மார்பைத் துளைக்க முடியவில்லை. பூதத்தின் உடலிலிருந்த உரோமங்களில் சிக்கிக்கொண்டது.

தொடர்ந்து அவன் பல அம்புகளை விட்டான். எல்லா அம்புகளும் அதன் உரோமங்களில் சிக்கிக் கொண்டன. அம்பு ஏதுமின்றி நின்றான் அவன்.

சிரித்த பூதம் தன் உடலைச் சிலிர்த்தது. அதன் உடலில் சிக்கியிருந்த அம்புகள் அனைத்தும் கீழே விழுந்தன.

ஈட்டியை எடுத்தான் அவன். அதன் மார்புக்குறி வைத்து வேகமாக எய்தான். அந்த ஈட்டியும் அதன் உரோமங்களில் சிக்கிக் கொண்டது.

எதற்கும் அஞ்சாத அவன் தன் வாளை உருவினான். பூதத்தின் மீது பாய்ந்தான். வாளால் அதன் உடலை வெட்ட முயன்றான். அந்த வாளும் அதன் உரோமங்களில் சிக்கிக்கொண்டது அவனால்வாளை எடுக்கமுடியவில்லை.

இளைஞனே! உன் படைக்கருவிகள் அனைத்தும் பயனற்று விட்டன. இனி என்ன செய்யப் போகிறாய்? எனக்கு உணவாவதைத் தவிர உனக்கு வேறு வழி இல்லை என்றது அது.

கலங்காத அவன் பூதமே! படைக்ருவிகளை நம்பி நான் இங்கு வரவில்லை. என் வலிமையை நம்பியே வந்துள்ளேன் என்றான்.

அந்தப்பூதத்தின் மீது பாய்ந்தான் அவன். தனது வலது கையால் அதன் மார்பில் ஓங்கிக் குத்தினான். அந்தக்கையும் அதன் உரோமங்களில் சிக்கிக் கொண்டது. அவனால் தன் கையை விடுவிக்க முடியவில்லை.

இடதுகையால் அதன் மார்பில் ஓங்கிக் குத்தினான். அதுவும் உரோமங்களில் சிக்கிக் கொண்டது.

உள்ளம் தளராத அவன் இரண்டு கால்களாலும் பூதத்தை



உதைத்தான். அவன் இரண்டு கால்களும் உரோமங்களில் சிக்கிக் கொண்டன. அப்போதும் அவன் வீரம் குறையவில்லை.

பூதமே உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று கத்தினான். தன் தலையால் அதை முட்டினான். அவன் தலையும் உரோமத்தில் புதைந்து கொண்டது.

பூதத்தின் பிடியிலிருந்து விடுபட அவன் திமிரிக் கொண்டிருந்தான்.

ஆ! இவனைப் போன்ற வீரனை நான் பார்த்ததேயில்லை. எல்லாவற்றையும் இழந்த நிலையிலும் அஞ்சாமல் இருக்கிறானே. இப்படிப்பட்ட வீரமா? என்று வியப்படைந்தது பூதம்.

இளைஞனே! இந்த நிலையிலும் நீ கவலைப்படவில்லையே. வீரத்துடன் செயற்படுகிறாயே. உனக்குச் சாவைப் பற்றிய அச்சம் இல்லையா? "என்று கேட்டது அது.

சாவதற்கு நான் ஏன் அஞ்ச வேண்டும்? பிறந்த எல்லோரும் ஒருநாள் இறந்துதானே ஆக வேண்டும். என் உடலை நீ அழிக்கலாம். என் உடலுக்குள் ஞானம் என்ற வாள் உள்ளது. அதை உன்னால் அழிக்க முடியாது.

என்னை விழுங்கினால் அந்த வாள் உன் வயிற்றுக்குள் செல்லும். உன் வயிற்றைத் துண்டு துண்டாக அறுத்துப்போடும் என்னுடன் சேர்ந்து நீயும் இறந்து போவாய் என்றான் அவன்.. இவன் சொல்வது உண்மையாக இருக்கவேண்டும் என்று நினைத்தது அது.

வீர இளைஞனே! உன்னைக் கொல்ல நான் விரும்பவில்லை. உன்னை விடுதலை செய்கிறேன். நீ உன் பெற்றோர்களுடனும் உறவினர்களுடனும் மகிழ்ச்சியாக இரு என்று அவனை விடுவித்தது.

விடுதலை பெற்ற அவன் பூதமே! நீ சென்ற பிறவியில் நிறையப் பாவங்களைச் செய்துள்ளாய். அதனால் கொடிய பூதமாகப் பிறந்து எல்லோரையும் கொன்று தின்கிறாய்.

இந்தப் பாவங்களுக்காக அடுத்த பிறவியில் நரகத் துன்பங்களை அனுபவிப்பாய். நான் வருகிறேன் என்று புறப்பட்டான்.

இதைக்கேட்டு உள்ளம் திருந்திய பூதம் இளைஞனே உன்னால் நல்லறிவு பெற்றேன். நான் இனி எப்படி வாழ வேண்டும்? வழிமுறைகளைச் சொல். அப்படியே நடந்து கொள்கிறேன் என்றது.

இங்கு நீ பூதம் போல வாழாதே. தெய்வம் போல வாழ்க்கை நடத்து. இந்த வழியாக வருபவர்களைக் காப்பாற்று. அவர்கள் காணிக்கையாகத் தரும் பலியை மட்டும் சாப்பிடு. உயிர்க்கொலை ஏதும் செய்யாதே.

இப்படியே நடந்தால் நீ இங்கும் புகழ் பெறுவாய். நல்வினையின் பயனாக உனக்குச் சொர்க்கமும் கிடைக்கும் என்றான்.

அப்படியே நடந்து கொள்கிறேன் என்றது அது. மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்ட அவன் தன் நாட்டை அடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் முன்னணியில் மனோ கணேசன் இணைவார்

## பொன்சேகா எதிர்பார்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் புதிய அரசியல் முன்னணி ஒன்று எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளது. இதில் முக்கிய பங்கை இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வகிக்கவுள்ளார். எனினும் இந்த முன்னணிக்கான பெயர் இன்னும் சூட்டப்படவில்லை. ஊழல் மிக்க தற்போதைய அரசாங்கத்தை தூக்கியெறிவதே புதிய அரசியல் முன்னணியின் நோக்கம் என்று சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது குடியியல் உரிமைகளை முழுமையாக வழங்கிய பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது.

அரசாங்கத்துக்கு கடந்த தேர்தலில் 4.5 மில்லியன் வாக்குகள் கிடைத்தன. இதனைத் தவிர நாட்டில் 9.5 மில்லியன் வாக்குகள் இருக்கின்றன. இதில் அரசாங்கத்துக்கு எதிரான வாக்குகளும் உள்ளன. எனவே, அரசாங்கத்தை தூக்கியெறிவதில் சிரமங்கள் இல்லை.

தமது புதிய முன்னணியில் மனோ கணேசன் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கிறேன். ஜே.வி.பி. தமது அரசியல் கொள்கையில் இருந்து மாறாத நிலையில் அது தமது முன்னணியில் இணையாது.

எனினும் ஜே.வி.பியின் பிரிந்து செயற்படும் சோசலிச முற்போக்கு முன்னணி விரும்புமாக இருந்தால் தமது முன்னணியில் இணைந்து கொள்ளலாம்.

இதேவேளை, விக்கிரமபாகு கருணாரட்னவை முன்னணியில் இணைத்துக் கொள்வது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# 35 ஆயிரம் பேர் கொரியமொழி பரீட்சைக்கு தோற்றுகின்றனர்

## வேலைவாய்ப்பு பணியகம் அறிவிப்பு

(கொழும்பு)


தென்கொரியாவில் தொழில்வாய்ப்பு பெற்றுக்கொள்ளும் நோக்கில் சுமார் 35 ஆயிரம் பேர் கொரிய மொழிப் பரீட்சையில் தோற்றுகின்றனர்.

இப்பரீட்சை எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் கொழும்பின் பத்து இடங்களில் நடத்தப் படவுள்ளது.

பரீட்சை நடைபெறும் பகுதிகளில் பாரியளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் முறைகேடுகளைத் தடுக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெறக் கூடாது என கொரிய அரசாங்கம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பரீட்சைக்குத் தோற்றும் 35 ஆயிரம் பேரில் 5 ஆயிரம் பேருக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இந்த பரீட்சை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (அ-2)



டெங்கு ஒழிப்பு நிகழ்வினை முன்னிட்டு யா/புனித மரியாள் வித்தியாலயத்தில் கடந்த 3 ஆம் திகதி சிரமதானம் நடைபெற்றது. இச்சிரமதானப் பணியில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# கனடாவிற்கு வரும் அகதிகளை கௌரவமாக நடத்த வேண்டும்

## அந்நாட்டு குடிவரவு அறிக்கையில் சுட்டிக்காட்டு

கனடாவிற்கு வரும் அகதிகளை முன்னரைப் போலவே தொடர்ந்தும் கௌரவமாக நடத்துவதை கனடாவின் ஹாப்பர் அரசாங்கம் உறுதி செய்து கொள்ள வேண்டும் என ஒன்றாரியோவின் குடிவரவு தொடர்பான் நிபுணர்களின் அறிக்கை கூறுகின்றது.

மேலும் அனுபவம் உள்ள தொழிலாளர்கள் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் கனடாவின் புதிய சட்டமானது கனடாவின் பொருளாதாரத்தை பெருமளவு பாதிக்கும் என ஒன்றாரியோ மாகாணத்தின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டுள்ள குடிவரவு தொடர்பான நிபுணர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிபுணர்களின் குழு அண்மையில் ஒன்றாரியோ மாகாணத்தின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சர் கௌரவ சார்ள்ஸ் சுசாவிடம் சமர்ப்பித்த அறிக்கையொன்றில் மேற்படி ஆலோசனை தெரிவிக்கப் பட்டுள்ளது.

கனடாவில் குறிப்பாக ஒன்றாரியோ மாகாணத்தில் அமுல் செய்யப்பட வேண்டிய குடிவரவு மற்றும் அகதிக் கோரிக்கையாளர்கள் தொடர்பான விடயங்கள் பற்றிய மேற்படி அறிக்கையை பொதுமக்களுக்கும் ஊடகங்களுக்கும் அறிவிக்கும் கலந்துரையாடல் ஒன்றை மாகாண அமைச்சர் கௌரவ சுசா கடந்த புதன்கிழமையன்று நடத்தினார்.

இதன்போது ஊடகங்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் சார்ள்ஸ் சுசா,

இயற்கை வளங்கள் மிகுந்து காணப்படும் கனடாவில் குறிப்பாக ஒன்றாரியோ மாகாணத்தில் அவ்வாறான வளங்களைப் பயனுள்ளதாக ஆக்க மனித வளம் தேவைப்படுகின்றது. எனவே, வெளிநாடுகளிலிருந்து அகதிகளாக வருபவர்களோ அன்றி குடிவரவு அனுமதி பெற்று வருகின்றவர்களோ அவ்வாறானவர்களிலிருந்து தகுதியானவர்களையும் தொழில் அனுபவம் கொண்டவர்களையும் நாங்கள் தெரிவு செய்து கனடாவின் பொருளாதார வளத்தை பெருக்கலாம் என்றுள்ளது. (அ-2)

# தேர்தல் முறைமை தொடர்பிலான புதிய உத்தேச சட்டத்தை ஏற்க முடியாது

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

தேர்தல் முறைமை தொடர்பிலான அரசாங்கத்தின் புதிய உத்தேச சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பும் தேர்தல் திணைக்களமும் தெரிவித்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் அவ் அமைப்பு மேலும் தெரிவிக்கையில்,

தொகுதிவாரி மற்றும் விருப்புத் தெரிவு அடிப்படையிலான புதிய தேர்தல் முறைமை ஒன்றை அமுல்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

கிராம எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பில் சர்ச்சை நிலைமை நீடித்து வருகிறது. எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பான பூரண அதிகாரத்தை துறைசார் அமைச்சருக்கு வழங்குவது பொருத்தமற்றது.

பூரண அதிகாரத்தை வழங்கினால் அமைச்சர் தனது அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ற வகையில் செயற்படக்கூடும். புதிய தேர்தல் முறைமை தொடர்பிலான உத்தேச சட்டத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும். குறிப்பாக எல்லை நிர்ணயம் தொடர்பிலான அதிகாரத்தை யாருக்கு வழங்குவது என்பது நியாயமான முறையில் தீர்மானிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவ் அமைப்பு, தேர்தல் திணைக்களம் ஆகியன வலியுறுத்தியுள்ளன. (அ-2)

# பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தம் செய்ய அரசு தயார்

## எஸ்.பி.தெரிவிப்பு

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு சமமான தரத்தில் உள்நாட்டு பல்கலைக்கழகங்களை அபிவிருத்தி செய்வதற்காக 1978 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் தயாராக இருப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்பி.திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

எமது பல்கலைக்கழகங்களைப் பற்றியும் கல்விச் சீர்திருத்தத்தில் அரசாங்கத்தின் வகிபாகம் பற்றியும் பாதகமான அறிக்கைகள் அண்மையில் வந்துள்ள போதிலும் கல்வி முறைமையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான தெளிவான தொலைநோக்கு அரசாங்கத்துக்குள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்கள், மீன்பிடி அமைச்சு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு சுகாதார அமைச்சு என்பவையும் கல்வி மீது செலவு செய்வதனால் இலங்கையில் கல்விக்கான ஒதுக்கீடு ஐந்து சதவீதத்திலும் கூடுதலானது என கல்வி அமைச்சர் மேலும் கூறினார். (அ-2)

# அரசாங்கத்தின் பதிலின் அடிப்படையில் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்

## பேராசிரியர் ஒன்றியத் தலைவர்

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவில்லை. பல்கலைக்கழக பேராசிரியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெறவிருந்தது.

எனினும் இந்தப் பேச்சுவார்த்தைகள் திட்டமிட்ட வகையில் நேற்று முன்தினம் நடைபெறவில்லை என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

திறைசேரியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தரவுடன் பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றிய உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்த முடியும். இதேவேளை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக அரசாங்கம் எவ்வித அறிவிப்பையும் வழங்கவில்லை என பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பதிலின் அடிப்படையிலேயே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஸ்ரீ அம்மா பகவான் கஜலக்சுமி பூஜை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவான் அனுக்கிரக அஷ்டலக்சுமி பூஜை கடந்த செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமை தோறும் நடைபெற்று வருகிறது. லக்சுமி பூஜையில் இவ்வாரம் கஜலக்சுமி பூஜை நடைபெறவுள்ளது. இதற்கமைய அனுக்கிரக கஜலக்சுமி பூஜை இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் சற்சங்க நிலைய வேதநாயகி இல்லத்திலும் சுழிபுரம் அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்திலும் சிவலிங்கப்புளியடி யாழ்ப்பாண சற்சங்கத்திலும் சுன்னாகம் சிவன்கோவில் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

வாழ்க்கை வசதிகள், பெயர், புகழ், இராஜபோக வாழ்க்கை, வீடு, வாகனம், நவீன வசதிகள், வெளியுலக பயணங்கள் கிடைக்க சகல ஐஸ்வர்யங்களையும் அளிக்கவல்ல கஜலக்சுமி பூஜையில் கலந்து பயன் பெறுமாறு யாழ்.மாவட்ட சற்சங்க ஒன்றியம் அறிவித்துள்ளது. (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாடசாலையில் மழை ஒழுக்கு; வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள்

## கொக்கிளாய் மேற்கு.அ.த.க.பா.மாணவர்கள் கதறல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்கிளாய் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மாணவர்களும் பெற்றோரும் இணைந்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பாடசாலையில் வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கல்வித் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சுமத்தியே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் குழுமி நின்ற மக்கள் தெரிவிக்கையில், மழை காலங்களில் மாணவர்கள் இருந்து கல்வி கற்பதற்கு இடம் இல்லை. சேவாலங்கா நிறுவனம் கிணறு ஒன்றைக் கட்டிக் கொடுத்தது. ஆனால், கிணற்றில் தண்ணீர் கிடையாது. இச்சிறுவர்களை எப்படி நாம் பாடசாலை அனுப்புவது, எத்தனை நாட்களுக்கு அவர்களை நாம் வேறு தேசத்திற்கு கற்பதற்காக அனுப்புவது.

அத்துடன் பாடசாலை நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டும். வலயக் கல்வி பணிமனை வரை நாங்கள் சென்று முறையிட்டும் அவர்கள் அதில் அக்கறை காட்டவில்லை என்றும் மக்கள் மனவேதனையுடன் தமது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

இதனைவிட மாணவர்கள் நாங்கள் எதிர் காலத்தில் சிறந்தவர்களாக விளங்க வேண்டும் என பல்வேறு கோசங்களை எழுப்பி தமது கவலையை தெரிவித்தனர்.

இதேவேளை, தொலைபேசியூடாக முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் மாணிக்கவாசகம் ராஜ்குமார் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரச்சினைகள் தொடர்பில் தாம் நேரடியாக சென்று கேட்டறிய இருப்பதாகவும் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்களை அவ்விடத்தில் இருந்து விலகிச் செல்லுமாறும் கேட்டுக்கொண்டார். (அ-2)

## சீல் வைக்கப்பட்ட கொல்களம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் கொட்டடிப்பகுதியில் சீல் வைக்கப்பட்ட கொல்களமானது யாழ்.மாநகர சபை முதல்வரின் தலையீட்டினையடுத்து நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து அவ்விடத்துக்கு நேரில் சென்ற யாழ்.மாநகர முதல்வர் திருமதி. யோ.பற்குணராசா, எஸ்.எஸ்.பி.குகநேசன், சுற்றுச் சூழல் பொலிஸ் உத்தியோகத்தர் பி.ஜெயந்த, மாநகரசபை பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜீவநாதன் ஆகியோர் நிலைமையை ஆராய்ந்து அறிந்து கொண்டனர்.

தவறாக கிடைக்கப்பெற்ற தகவல்கள் காரணமாகவே கொல்களம் மூடப்பட்டதாக கூறிய யாழ். மாநகர முதல்வர் உடனடியாக கொல்களத்தினை திறந்து வைத்து அன்றாட செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தனித்துவமான அணுகுமுறை

### பின்பற்றப்படுகிறது என்கிறார் பீரிஸ்

புறச்சக்திகளினால் பிரயோகிக்கப்படும் கூடுதலான அழுத்தங்கள் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என வெளிவிவகார அமைச்சர். ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். கொலம்பிய பல்கலைக்கழகத்தில் ஆற்றிய விசேட உரையின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகின் மிகக்கொடிய பயங்கரவாத அமைப்பை வென்றதனைப் போன்றே நாட்டின் ஏனைய சவால்களுக்கும் அரசாங்கம் வெற்றிகரமாக முகம் கொடுக்கும்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கும் நோக்கில் சர்வதேச விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை அமைப்பதன் மூலம் அதனை விடவும் முக்கியமான தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலைமை ஏற்படும்.

27 வீதமான சிங்கள மக்கள் வாழ்ந்து வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றியீட்டியுள்ளது. இதன் மூலம் ஏனைய இன சமூக மக்களும் ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்கின்றமை அம்பலமாகியுள்ளது.

ஒவ்வொரு நாடும் சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் தனித்துவமான அணுகுமுறைகளை பின்பற்றும் அதே நிலமையே இலங்கையிலும் நீடிக்கிறது.

நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் அர்த்தமுள்ள வகையில் அமையப் பெற்றது.

மேலும் யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் விளக்கமளித்தார். (அ-2)

## தாய், சேய் மரணம் குறித்து கலந்துரையாடல்

யாழ். போதனா வைத்தியசாலையில் தாய், சேய் மரணம் தொடர்பாக சுகாதார அமைச்சின் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

அக்கலந்துரையாடலில் சுகவாழ்வு அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ். போதனா வைத்திய சபையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீ.பவானந்தராஜா தெரிவித்தார்.

அவர்இது தொடர்பாக தெரிவிக்கையில்,

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது தாய், சேய் மரண வீதம் குறிப்பிட்டளவு அதிகரித்து காணப்படுகிறது.

இவர்களுக்கு பிரசவ வலி ஏற்பட்டு தாமதமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லல், தீவிபத்துக்கள், வெளியே காணப்படும் சில மருத்துவமனைகளின் தவறான சிகிச்சை முறைகள் காரணமாக காணப்படுகின்றது.

இவற்றினால் பாதிப்புற்ற கர்ப்பிணித் தாய்மார்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே இறுதியில் அனுமதிக்கப்படுகின்றனர்.

இதனால் இறுதிக்கட்டங்களில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதனால் சிகிச்சை பலனின்றி தாயும் சிசுவும் இறந்து விடுகின்றனர்.

இதனால் தாய்,சேய் மரணம் தொடர்பான கலந்துரையாடல் அடுத்த வாரம் இடம் பெறவுள்ளது. மேலும் இக்கலந்துரையாடலின் போது யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஜப்பான் நாட்டினால் கட்டிமுடிக்கப்பட்டு வழங்கப்பட்ட கட்டடம் தைமாதத்தில் எந்தத்திகதியில் திறப்பது என தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-4)

## பெற்றோலுக்கு தட்டுப்பாடில்லை

நாட்டில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலுக்கான தட்டுப்பாடு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்ற போதும் அவ்வாறான தட்டுப்பாடுகள் எவையும் இல்லையென்று கொலன்னாவ எரிபொருள் மொத்தக்களஞ்சிய நிலையத்தின் தலைவர் எம்.ஆர். டபிள்யூ. சொய்சா தெரிவித்துள்ளார். கொலன்னாவ எண்ணெய் களஞ்சிய சாலையில் போதுமான எரிபொருள் இருப்பில் இல்லாத நிலையில் நாட்டின் பல பகுதிகளில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லையென்று முன்னதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் இதனை அவர் மறுத்துள்ளார். இதேவேளை, நேற்று முன்தினம் பல பகுதிகளில் பெற்றோலுக்கான தட்டுப்பாடு அவதானிக்கப்பட்டதாக எண்ணெய் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எனினும் இந்தநிலை தற்போது சீர்செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## ப.நோ.கூ.சங்கம் திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

கரைச்சி தெற்கு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நெற்களஞ்சியசாலை நேற்றைய தினம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் கிளிநொச்சி உருத்திரபுரப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் 5,473, 376,15 ரூபா செலவில் மேற்படி நெற்களஞ்சிய சாலை மீள் கட்டுமானம் செய்யப்பட்டுள்ளது.


நேற்றைய நிகழ்வில் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ-9)

## காணி தொடர்பான நடமாடும் சேவை

(சிவநகர்)

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் காணி ஆண்ணயாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் காணி தொடர்பான நடமாடும் சேவை எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கரைச்சி பிரதேசசெயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-3-254)



சுன்னாகம் பொலிஸாரினால் சிறுவர் தினத்தை முன்னிட்டு கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட சித்திரப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவிக்கு பொலிஸ் அதிகாரி பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாக புரிந்துகொள்ளாத அறிவு நமக்குச் சொந்தமாகாது. ~கதே

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு ஓர் அன்புமடல்

வணக்கத்துக்குரிய கொழும்பு கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு அன்பு வணக்கம்!

வடக்குக் கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாட்டுத் தலையீடு அவசியமில்லை என்று நீங்கள் ஊடகவியலாளர் சந்திப்பில் கூறிய கருத்துத் தொடர்பில் இக்கடிதத்தை அவசரமாக எழுதுகின்றோம்.

இலங்கையில் நீண்டகாலமாக தீர்க்கப்படாத பிரச்சினையாக இருந்துவரும் இனவிவகாரம் தொடர்பில், கத்தோலிக்க மதகுருமார் விடுத்த அறிக்கைகள் காத்திரமானவை.

அதிலும் குறிப்பாக யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களும், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களும் விடுத்த அறிக்கைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உள்ளார்ந்தமாக வெளிப்படுத்துபவை.

இருந்தும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் வெளிநாடுகள் தலையிடத் தேவையில்லை என்று நீங்கள் கூறுவதற்கு முன்னதாக உங்கள் திருச்சபைக்கு கீழ் இருக்கக்கூடிய கத்தோலிக்க-தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற மறை மாவட்ட ஆயர்களையும் குருமுதல்வர்களையும் ஒருமுறை சந்தித்து, அவர்களின் அபிப்பிராயங்களை கேட்டறிந்தபின், உங்களுடைய கருத்தைக் கூறியிருந்தால் அது ஏற்புடையதாக இருந்திருக்கும்.

ஆனால் எழுந்தமானமாக, தமிழ் மக்களின் உரிமை விவகாரத்தில் தாக்கம் விளைவிக்கக் கூடியதான கருத்தை பொறுப்புவாய்ந்த -மத குருவாக இருக்கக்கூடிய தாங்கள் தெரிவித்திருப்பது குறித்து தமிழ் மக்கள் ஆழ்ந்த வேதனை கொண்டுள்ளனர்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைகளில் வெளிநாடுகள் தலையிடத் தேவையில்லை என்று நீங்கள் கூறிய கருத்து உங்கள் தனிப்பட்ட கருத்தாக அல்லது ஏதோவொரு நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்ட கருத்தாக நீங்கள் கூறியிருக்கலாம்.

ஆனால் உங்கள் கருத்து கொழும்பு திருச்சபையின் தலைவர் கூறிய கருத்தாகும்போது அது பற்றிய பார்வைகள் வலிமையானவையாக இருக்கும்.

அன்புக்குரிய கர்தினால் அவர்களே!

உள்நாட்டில் தீர்க்கக்கூடிய பிரச்சினையாக இருந்திருந்தால் அது ஏன் இன்னமும் தீர்க்கப்படவில்லை.

யேசுபிரானின் பெயரால் உங்களிடம் கேட்கிறேன்! இலங்கை அரசுகள் ஏதேனும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என நீங்கள் நம்புகிறீர்களா?

ஓ! சிங்கள பௌத்த பீடங்கள் ஏற்படுத்திய தீராத்துன்பங்களின் மத்தியில் சிங்கள கத்தோலிக்க திருச்சபைகளும் இணைந்து கொண்டு எங்களை தாக்க முற்பட்டால், யாரிடம் சொல்வோம் இறைவா! என்ற பாடலைத்தான் மௌனமாக இசைக்க முடியும்.

# தெரிவுக்குழுவை மறுக்கும் கூட்டமைப்பு தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டும்

## அல்லது தமிழர் பிரச்சினையை சர்வதேசமும் மறந்துவிடும் என்கிறார் பிரபா எம்.பி

இனப்பிரச்சினை தீர்விற்கு அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக் குள் வருமாறு கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்திருக்கும் நிலையில் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் கூட்டமைப்பினர் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமான தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

அது குறித்து அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு,

இந்நாட்டில் இனப்பிரச்சினையை கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தையின் மூலம் சரியான முறையில் தீர்த்து வைப்பார்கள் என்ற அடிப்படையிலேயே அவர்களுக்கு மக்கள் வாக்களித்தனர். இந் நாட்டில் தமிழ்மக்கள் சரிசமமாக சகல உரிமைகளுடன் வாழ்வதற்கும் மீள்குடியேற்றங்கள் சரியான முறையில் இடம் பெறுவதற்கும் அப்பாவித் தமிழ் அரசியல் கைதிகள்விடுதலை பெறுவதற்கும்யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகள் சீர மைக்கப்படுவதற்கும் வடகிழக்கில் பாடசாலைகளை கட்டியெழுப்பி கல்வித் தராதரத்தை உயர்த்துவதற்கும் இவ்வாறான அனைத்து தமது தேவை களை கூட்டமைப்பினர் நிறைவேற்றி வைப்பார்கள் என்ற நம்பிக்கையை வடகிழக்கு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் இது சம்பந்த மாக கூட்டமைப்பினர் எவ்வாறான வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள் என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

மீள்குடியேறிய மக்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு நிதி சேகரிப்பதோ அல்லது கோயில்களுக்குச் சென்று கைதிகளின் விடுதலைக்காக தேங்காய் உடைப்பதற்கோ மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

3 வருடங்களுக்கு மேலாகியும் அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வில் எவ்வித அக்கறையும் இல்லாமல் இருக்கின்றது என்பது உண்மைதான்.

அதனை விமர்சிக்கும் நாங்கள் இனப்பிரச்சினை தீர்வில் எவ்விதமான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம் என்பதனையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழ் மக்களாகிய எமக்குத் தான்இனப்பிரச்சினை தீர்வில் அதிக அக்கறை இருக்கவேண்டுமே தவிர சிங்கள மக்களுக்கு அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குகளுக்காக தமிழர் ஒற்றுமை பற்றியும் வீர வசனங்களைப் பேசியும் வாக்குகளைப் பெற்று தமது பிரதிநிதித்துவங்களை அதிகரித்துக்கொள்வதிலேயே கூட்டமைப்பினர் ஆர்வம் காட்டுகின்றனர். இருப்பினும் இன்னும் வட-கிழக்கு மக்கள் கூட்டமைப்பினர் மீது அதீத நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என் பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

இதற்காக சிங்கள அரசின் காலடியில் இவர்களை விழச்சொல்லவில்லை. இன்னும் சில ஆண்டுகள் இப்படியே செல்லுமாயின் இனப்பிரச்சி னைத் தீர்வு என்ற விடயத்தை இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல சர்வ தேசமும் மறந்துபோய்விடும்.

கிழக்கு மாகாணசபை முடிபுகளின் மூலமாக தமிழ்மக்களின் ஆணையைப் பெற்ற கூட்டமைப்பினர் எமது மக்களுக்காக சாதிக்கப்போவது என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் மூலமாக நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை வட-கிழக்கு மக்களுக்குமட்டுமல்ல மலையக இந்திய வம்சாவளி மக்களுக்கும் கூட இருந்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாம் அதனை இழந்துவிட்டோம்.

ஆகவே வெறும் ஊடக அறிக்கை அரசியலை தவிர்த்து உடனடியாக ஆக்க பூர்வமான நடவடிக்கைகளில் கூட்டமைப்பினர் இறங்குவார்களேயானால் நாட்டிலுள்ள அனைத்து தமிழ் அரசியல் தலைவர்களும் அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# இரு நூல்களின் அறிமுக நிகழ்வு

(பூந்தோட்டம்)

வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி சி.சிவதாஸின் 'மகிழ்வுடன்', 'நலமுடன்' ஆகிய இரு நூல்களின் அறிமுக நிகழ்வும் மனநல மேம்பாட்டுச் சொற்பொழிவும், நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா தமிழ்ச்சங்கத்தில் நடைபெறவுள்ளது.

வைரவப் புளியங்குளம் ஆதிவிநாய கர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நூல்களின் அறிமுக வுரையினை மனநல மருத்துவர் வைத்திய கலாநிதி சி.சுதாகரன் ஆற்ற, முதற்பிரதிகளை வவுனியா பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் வீ.சுதாகரன் பெற்றுக் கொள்வார். மனநல மேம்பாட்டுச் சொற்பொழிவினை நூலாசிரியர், மருத்துவ நிபுணர் சி.சிவதாஸ் நிகழ்த்துவார்.

சர்வதேச உளநல வாரத்தினை அனுஷ்டித்துவரும் இவ்வேளையில் நடைபெறும் இவ்உளநல நூல்களின் அறிமுக விழாவில் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு வவுனியா தமிழ்ச் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (அ-9, 266)

# சின்மயாமிஷனில் புதிய வகுப்புகள்

நல்லூர், செட்டித்தெரு ஒழுங்கையில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் நாளை ஞாயிற்றுக்கிழமை புதிய வகுப்புக்கள் இலவசமாக ஆரம்பிக்கப்பட உள்ளதாக சின்மயா மிஷன் ஜாக்ரத சைதன்யா சுவாமி அறிவித்துள்ளார்.

நாளை தொடக்கம் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7.45 மணி தொடக்கம் 8.45 மணிவரை உபநிடத வகுப்பு, முற் பகல் 10.15 மணி தொடக்கம் முற்பகல் 11.15 மணி வரை வாழ்க்கை முறை கலந்துரையாடல், முற்பகல் 11.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை சிறுவர்களுக்கான வகுப்பு, மாலை 5.15 மணி தொடக்கம் மாலை 6.15 மணிவரை பஜனை தோத்திர பாராயணம் என்பன நடைபெறவுள்ளன.

இவ்வகுப்புக்களை வட மாகாண சின் மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா [illegible] பஜனை அ[illegible] (அ-9)

# 15 வயது சிறுமி மீது 27 வயது இளைஞன் சேஷ்டை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை சிறுமியொருவரை தனது காதல் வலையில் வீழ்த்தி பாலியல் துஷ்பிரயோகம் புரிந்த வாலிபனை தாம் கைது செய்துள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

15 வருடங்களும் 5 மாதங்களுமான பாடசாலைச் சிறுமியினை 27வயதுடைய இளைஞன் தனது காதல் வலையில் வீழ்த்தி அச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இச்சம்பவம் வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த 25-ம் திகதி இடம்பெற்றுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட சிறுமி சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

குறித்த இளைஞன் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-4)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



உருவமற்ற நான், நீங்கள் என்னை முழு மனதுடன் நாடுகின்றபோது, மட்டுமே நான் உங்களது இதயத்துள் நீங்கள் விரும்பும் வடிவிலோ அல்லது நான் தேர்ந் தெடுக்கும் வடிவிலோ ***அந்தர்யாமினாக*** வருவேன் அல்லது நான் உங்களுக்கு வெளியேயும் மீண்டும், நீங்கள் விரும்பும் வடிவிலோ அல்லது நான் தேர்ந்தெடுக்கும் வடிவிலோ தோன்றுவேன். ஏனென்றால் அனைத்து வடிவங்களும் என்னுடைய வடிவமேயாகும். மேலும் நானே உங்களது பரமமித்ரனானேன்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உண்மையான மகிழ்ச்சி



உங்கள் தவறுகளைப் பெரும்பேறாக நினையுங்கள். அவை நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்றால் மிகையில்லை.

அழுகை பலவீனத்தின் அறிகுறி. அடிமைத் தனத்தின் அறிகுறி. தோல்விகள் இல்லாத வாழ்க்கையால் பயனேதும் இல்லை. போராட்டம் இல்லாத வாழ்க்கை சுவையாக இருக்காது.


தன்னலத்தை ஒழிப்பதில்தான் உண்மையான மகிழ்ச்சியிருக்கிறது. உன்னைத் தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

கோபப்படும் மனிதனால் அதிக அளவோ அல்லது செய்யும் பணியைச் சிறப்பாகவோ செய்யமுடியாமல் போய்விடும். ஆனால் அமைதியானவனோ சிறப்பாகப் பணியாற்றுவான்.

மன்னிக்கக்கூடியதும் சமநோக்குடையதும் நிலை தடுமாறாததுமான மனதை எவன் பெற்றிருக்கிறானோ அவனே ஆழ்ந்த அமைதியில் திளைத்திருப்பான்.

கருணை என்பது சொர்க்கத்தைப்போன்றது. நாம் அனைவரும் கருணையுள்ளவர்களாக மாறி சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை வெலிகந்த சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்காக வடமாகாணத்திலிருந்து 300 இற்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகளும் பங்குபற்றவுள்ளனர். இவர்களோடு பயிற்றுவிப்பாளர்களும் பொறுப்பாசிரியர்களும் செல்லவுள்ளனர். (23)

## ரூபவாகினி வெற்றிக்கிண்ணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் ரூபவாகினி நடத்தும் 38 ஆவது ரூபவாகினி வெற்றிக்கிண்ணம் இன்று காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இக்கரப்பந்தாட்டப் போட்டிகளில் வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலிருந்தும் ஆண்,பெண் அணிகள் கலந்து கொள்ளவுள்ளன. முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன. (23)

## கொக்குவில் இந்து காலிறுதிக்குத் தெரிவு

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும் 15 வயதுப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதிக் கொண்டது.

இப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் குருநகர் சென். ஜேம்ஸ் மத்திய வித்தியாலய அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.

அதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 5:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இன்று சனிக்கிழமை காலிறுதிப் போட்டி துறையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

## கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் கழகங்கள் உரிய நேரத்திற்கு சமூகம் தந்து போட்டியில் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3-24)

# அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் சம்பியன்



(கரவெட்டி)

யாழ். அரச அதிபர் வெற்றிக்கிண்ண வலைப்பந்தாட்ட பரபரப்பான இறுதிப் போட்டியில் யாழ்.மாவட்ட செயலக அணியை தோற்கடித்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

யாழ்.மாவட்ட செயலக நலன்புரி சங்கம் வருடம்தோறும் நடத்திவரும் அரச அதிபர் வெற்றிக்கிண்ண வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.

இதில் முதற்பாதி ஆட்டத்தில் 7:6 என்ற புள்ளி அடிப்படையில் யாழ்.மாவட்ட செயலக அணி முன்னணி வகித்தது.

தொடர்ந்து விறுவிறுப்பாக இடம்பெற்ற பிற்பாதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 7:3 என்ற புள்ளியில் முன்னணி வகித்தது. இறுதியில் 13:10 என்ற புள்ளி அடிப்படையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியின் மணிமொழி சிறந்த வீராங்கனையாகவும் சிறந்த தடுப்பாளராக அதே அணியின் பிறேமினி பேற்று எய்யும் வீராங்கனையாக நளினி சிறந்த மைய வீராங்கனையாக மாவட்ட செயலக அணியின் திருமதி ஜே.எவ்.ஏ.ரூபசிங்கம் ஆகியோர் தெரிவு செயற்பட்டனர். (3-24)

## கரவெட்டி பிரதேச செயலக அணி வெற்றி



(கரவெட்டி)

யாழ். அரச அதிபர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட பரபரப்பான இறுதிப்போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை பனால்டி உதைமூலம் தோற்கடித்து கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினால் வருடந்தோறும் நடத்திவரும் அரச அதிபர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டி நேற்று முன்தினம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் பெரும்திரளான ரசிகர்கள் மத்தியில் இடம்பெற்றது.

இரு அணிகளும் முதற்பாதி ஆட்டத்தில் கோல் போடுவதற்கு பல வழிகளிலும் முயற்சித்த போதும் அது கைகூடவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் 10 ஆவது நிமிடத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியின் ஜேசுதாஸ் தனது அணிக்காக கோல் ஒன்றை பெற்றுக்கொடுத்தார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பிற்பாதி ஆட்டத்தில் 12 ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியின் வீரர் விவேகானந்தன் தனது அணிக்காக கோல் ஒன்றை பெற்றுக்கொடுத்து ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்தார்.

ஆட்டம் தொடர்ந்து விறுவிறுப்பாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளை கரவெட்டி பிரதேச செயலக அணியின் வீரர் ஒருவர் விதிகளை மீறி ஆட்டத்தில் ஈடுபட்டமையால் சிவப்பு அட்டைகாட்டி வெளியேற்றப்பட்டார்.

இறுதியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் போட்டமையால் வெற்றியைத் தீர்மானிக்க பனால்டி உதை வழங்கப்பட்டது. இதில் 3:2 என்ற கோல்கணக்கில் கரவெட்டி பிரதேச செயலக அணி அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

ஆட்டநாயகனாக பருத்தித்துறை பிரதேச அணியின் விவேகானந்தன், சிறந்த கோல்காப்பாளராக கரவெட்டி பிரதேச செயலக அணியின் உதயகுமார், தொடர்நாயகனாக அதே அணியின் அனுராகாந்தன், சிறப்பு விருதை ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியின் செந்தில்மாறன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (3-24)

## சங்கானை பிரதேச செயலகத்தை வீழ்த்தியது யாழ்.மாவட்டம்



(கரவெட்டி)

யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் இறுதிப் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணியை யாழ். மாவட்ட செயலக அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

யாழ். மாவட்ட செயலக நலன்புரி சங்கத்தினால் வருடம்தோறும் நடத்தப்படும் அரச அதிபர் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சங்கானை பிரதேச செயலக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை பிரதேச செயலக அணி 13 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிவறூபன் 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் யாழ். மாவட்ட செயலக அணியின் சார்பில் சுரேன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட செயலக அணி 12 .3 பந்துகளில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ராஜசூரிய 29, முகுந்தன் 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

இறுதியில் 9 விக்கெட்டினால் வெற்றிபெற்று யாழ். மாவட்ட செயலக அணி அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. இவ் இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக இராஜசூரியும் சிறந்த பந்து வீச்சாளராக சுரேனும் தொடர்நாயகனாக சிவதாசனும் சிறந்த களதடுப்பாளராக சங்கானை பிரதேச செயலக வீரர் கிரிதரனும் தெரிவு செய்யப்பட்டனர். (3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெயிலின் அதிரடியில் வெளியேறியது ஆஸி

கிறிஸ் ஹெயில், பொலார்ட்டின் அதிரடியிலும் பந்துவீச்சின் மூலமும் அவுஸ்திரேலிய அணியை அடக்கியது மேற்கிந்தியத் தீவுகள்.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணியின் சம்பியன் கனவு தகர்ந்து போயுள்ளது.

74 ஓட்டங்களால் அபாரமாக வெற்றி பெற்றுள்ளது மேற்கிந்தியத் தீவுகள்.

4-வது உலகக்கிண்ண இருபது-20 கிரிக்கெட் போட்டி இம்முறை இலங்கையில் நடைபெற்று வருகின்றது.

நேற்றிரவு 7 மணிக்கு கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இடம் பெற்ற அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் டரன் சமி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் ஹெயில், பொலார்ட்டின் அதிரடியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களினை இழந்து 205 ஓட்டங்களை எடுத்தது.

அதிகபட்சமாக ஹெயில் ஆட்டமிழக்காமல் 41 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 5 நான்குகள் உட்பட 75 ஓட்டங்களையும், பொலார்ட் 38 ஓட்டங்களையும், பிராவோ 37 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.




பந்துவீச்சில் கம்மின்ஸ் 2 விக்கெட்டுக்களையும் டோஹேர்டி, ஸ்ரார்க் ஆகியோர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

206 ஓட்டங்களினை பெற்றால் வெற்றி என்ற இமாலய இலக்கினை துரத்திய அவுஸ்திரேலியா வால் 16.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

அவ்அணியில்அணித் தலைவர்ஜோர்ஜ்பெய்லி அதிரடியாக ஆடி 29 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 6 நான்குகள் உட்பட 63 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி 18 ஓட்டங்களையும், கம்மின்ஸ் 13ஓட்டங்களையும்அதிகபட்சமாகப் பெற்றனர்.ஏனையஅனைத்து வீரர்களும் ஒற்றை இலக்கத்துடன் பவிலியன் திரும்பினர்.

பந்துவீச்சில் ரவி ராம்போல் 3 விக்கெட்டுக்களையும், நரேன், பத்ரி தலா 2 விக்கெட்டுக்களையும், சாமுவேல்ஸ்ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக கிறிஸ் ஹெயில் தெரிவு செய்யப்பட்டார். நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் மோதவுள்ளன. இப்போட்டிஇரவு 7 மணிக்கு கொழும்பு ஆர்.பிரேமதாஸசர்வதேச கிரிக்கெட் அரங்கில் இடம்பெறவுள்ளது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தருமலிங்கம் ஜெயேந்திரா (குட்டி)

அன்பின் செல்வமே! அணையாத் தீபமே!
எங்கள் இதயத்தில் ஒளிரும் சுடரே!
உன்னை இழந்து நாங்கள் இங்கு
ஒன்றும் தெரியாது பரிதவிக்கின்றோம்!
ஓடோடிவந்து உள்ளம் குளிர
எங்கள் கண்ணீரைத் துடையாயோ!

06.10.2012 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்வு : 30.03.1976
உதிர்வு: 18.09.2011

செபஸ்ரியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மாமன், மாமி.

(சி-1223)

மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாண மாவட்ட செயலக மலசலகூடங்களைத் துப்புரவு செய்தலுக்கும், சுற்றுப்புறம் மற்றும் கழிவுநீர் வழிந்தோடும் வாய்க்கால் என்பவற்றைத் துப்புரவு செய்தலுக்குமான கேள்வி அறிவித்தல்**

யாழ். மாவட்ட செயலக வளவில் உள்ள சகல மலசலகூடங்களையும், சுற்றுப்புறம் மற்றும் கழிவுநீர் வழிந்தோடும் வாய்க்கால் என்பவற்றைத் துப்புரவு செய்தலுக்குமான கேள்விகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. 2012.10.09 ஆந் திகதியிலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்வதுடன், இது தொடர்பான மேலதிக தகவல்களை செயலக நிர்வாகக் கிளையில் உதவி மாவட்ட செயலாளர் (தொலைபேசி இல. 0212222771) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைக்கேள்விகள் சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.30 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபாய் 100.00 உம் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபாய் 5000.00மும் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்களை தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் யாழ்ப்பாண மாவட்ட செயலக மலசலகூடங்களைத் துப்புரவு செய்தலுக்கும், சுற்றுப்புறம் மற்றும் கழிவுநீர் வழிந்தோடும் வாய்க்கால் என்பவற்றைத் துப்புரவு செய்தலுக்குமான, விலைக்கேள்விகள் எனக் குறிப்பிட்டு 2012.10.19ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு நேரடியாக செயலக நிர்வாகக் கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன் போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.
(சி-1229)

## ஆறு மாத காலத்தில் VISA ஒழுங்குகள்

CANADAவுக்கு குடும்பத்துடன் குடியேறுவதற்கான FAMILY VISA எம்மால் பெற்றுக் கொடுக்க முடியும்.



**தகைமைகள்**

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளமாணி, முதுமாணி பட்டம் பெற்றவர்கள், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங் கள் மூலமாக DIPLOMA பட்டம் பெற்றவர்கள் ஓராண்டு வேலை அனுபவத்துடன் செல்லமுடியும்.

**NEWZEALAND, AMERICA, LONDON STUDENT VISA**

NEWZEALAND:- (G.C.E. O/L, A/L) தகைமையுடன் மேற்படிப் புக்கு செல்லமுடியும். அங்கு மூன்று ஆண்டுகள் கல்வி கற்ற பின் அந்த நாட்டின் நிரந்தர குடியுரிமையை பெற்றுக் கொள்ள வும் அத்துடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் அழைத்துக் கொள்ள முடியும்.

**CYPRUS/ இத்தாலி**

சைபிரஸ் நாட்டில் உயர்கல்வியை கற்க செல்பவர்கள் அந்நாட்டில் கல்வியை முடித்துக் கொண்டு ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் குடியேறுவதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இத்தாலியில் Work Permit Visa மூலம் குறுகிய காலத்தில் பிரயாணம் மேற்கொள்ளமுடியும்.

**மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு**

மத்திய கிழக்கு நாடுகளான டுபாய், சவுதி அரேபியா, ஓமான், டோகா, கட்டார், குவைத் போன்ற நாடுகளுக்கு ஒரு மாதத்தில் செல்லக் கூடிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.



Seaman தொழில் வேலைசெய்யவிரும்புபவர்கள்மொதபயிற்சியின்பின்வேலையைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

**Rainbow Travels**
இல. 30/2, 3ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
TEL: 0212219596 / 0778980652

**BANK BALANCE / SPONCER**

வெளிநாடுகளில்கல்விகற்கசெல்பவர்களுக்கும்/Tourist Visaமூலம்செல்பவர்களுக்கும்தேவையான BankBalance/ Sponcer ஒழுங்குகள்எம்மூலம்செய்து கொள்ளலாம். (சி-1228)

"அன்பே சிவம். ஒன்றே குலம். ஒருவனே தேவன்."

## ஸ்ரீவித்தியா குருகுலம்

வழங்கும், ஆசிரியர் முத்துலிங்கத்தின்

## 'EASY ENGLISH'

- உத்தியோகத்தர்க்கு
- A/L படித்தவர்க்கு
- O/L மாணவர்க்கு
- உயர்கல்வி மாணவர்க்கு
- மகளிர்க்கு
- A/L மாணவர்க்கு
- பிரத்தியேக வகுப்புக்கள்

குருகுல மரபு :
(I) கல்வி இலவசம்
(II) குரு, 'தந்தையும்' 'தாயும்' ஆனவர்.
(III) விரும்புவோர், குருதட்சணை கொடுக்கலாம்

விபரங்கள் + பெயர்பதிவு 773212711 மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினிபஸ் - தனியார் பேருந்து விபத்து...








இடம்பெற்ற இந்த விபத்தில், பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ்ஸின் சாரதி உட்பட இருவர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்களை கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்பு ஒவ்வொருவராக அங்கிருந்து யாழ்.போதனாவைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டனர்.

படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 12 பேரில் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் வடமராட்சியைச் சேர்ந்த மாணவன் என தெரிவிக்கப்பட்டபோதும் அவரது உடல் நேற்றிரவு வரை இனங்காணப்படவில்லை. இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பவ இடத்தில் பலியான மினிபஸ் சாரதி அல்வாய் மத்தியைச் சேர்ந்த அன்னலிங்கம் அமுதராஜ்(வயது 34), இவர் 3 பிள்ளைகளின் தந்தையாவார்.

இவரது சடலம் உறவினர்களால் இனங்காணப்பட்டுள்ளது.

இருப்பினும் சம்பவ இடத்தில் பலியான வேலாயுதம் செந்தில் குமார் என்பவரின் மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை தனியார் பேருந்தின் சாரதியான கே.துஷார என்பவர் மிகவும் மோசமாக படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மினிபஸ் சாரதி புதிதாக காப்பற் இடப்பட்ட வீதியினால் (குறித்த பகுதியில் வீதியின் ஒருபக்கத்தில் மட்டுமே காப்பற் இடப்பட்டுள்ளது.) பேருந்தைச் செலுத்தி வந்ததாகவும், இதன்போது வேகக்கட்டுப்பாட்டை இழந்ததனால் விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதில் மினிபஸ்ஸில் பயணித்த, கே.எம்.ஜே.குமார (வயது 31), ஜே.திவாகரன், என்.சிவயோகன், ரி.நாகேஸ்வரி (வயது 35), எல்.மேரிநாயகி (வயது 45), கே.சிவகுமாரராசா, எல்.இளங்கோவன், எஸ்.குமரேசசர்மா ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் விபத்தில் காயமடைந்தவர்களையும், விபத்தில் உயிரிழந்தவர்களின் உடலகளையும் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டதோடு உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

இவ்விபத்துச் சம்பவத்தினால் இருபாலைச் சந்திக்கு அண்மையில் சுமார் 3 மணி நேரம் வரை போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தமையால் அவ்வீதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-6,4,11)

## காணாமல்போனோர்...

எதிர்வரும் 2013-ம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைப் பேரவை அமர்வுக்கு முன்னர் இதற்கான விளக்கத்தை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும் என நவநீதம்பிள்ளை கேட்டுள்ளார் என்றும் வெளிநாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அவர் ஜெனிவாவிலுள்ள இலங்கை பிரதிநிதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்த விடயம் குறித்து இலங்கைக்கு விஜயம் செய்த மனித உரிமை பேரவை உறுப்பினர்களும் அரசின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.

இருப்பினும் இலங்கை அரசு இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது தொடர்சியான மௌனத்தையே கடைப்பிடிப்பதாகவும் அந்தக் கடித்தில் நவநீதம்பிள்ளை இலங்கை அரசைச் சாடியுள்ளார். (ந-11)

## அரசாங்கத்தை கவிழ்...

பதினெட்டாம் திகதி கொழும்பு ஹைட்பார்க் திடலில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சரத் பொன்சேகா எனக்கு நேரடியாக அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவருடன் இணைந்து செயற்படும் பல ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த அழைப்பை எனக்கு விடுத்துள்ளனர். ஜனநாயக மக்கள் முன்னணி, தேசிய தளத்தில் விறுவிறுப்பாக செயற்படும் ஒரு அரசியல் கட்சி என்பதால் எமக்கு இத்தகைய அழைப்புகள் கிடைப்பது ஆச்சரியம் அல்ல.

பதினெட்டாம் திகதி கூட்டம்: அரசியல் கட்சி கூட்டமைப்பு ஒன்றின் ஆரம்ப அமைப்பு கூட்டம் அல்ல என்றும் அது அரசு எதிர்ப்பு பொதுக் கூட்டம் என்றும், பல்வேறு சிங்கள -பௌத்த அரசியல், மத, சமூக தலைவர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ள இந்தக் கூட்டத்தில், நானும் கலந்து கொண்டு தமிழ் மக்கள் சார்பாக கருத்துரையாற்றி அந்த நிகழ்வுக்கு தேசிய அடையாளத்தைத் தர வேண்டும் என தான் விரும்புவதாக சரத் பொன்சேகா என்னிடம் தெரிவித்தார்.

அவரது அழைப்புக்கு நான் நன்றி தெரிவித்துள்ளேன். ஆனால் பதினெட்டாம் திகதி கொழும்பில் நடைபெறும் கூட்டத்தில் நமது கட்சி கலந்து கொள்வது தொடர்பில் நான் இணக்கம் தெரிவிக்கவில்லை.

எது எப்படி இருந்தாலும் எதிர்வரும் 11-ம் திகதி வியாழக்கிழமை நடைபெற ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எமது அரசியற் குழு கூட்டத்தில் இது தொடர்பாகவும் நாம் ஆராய்வோம் என அவருக்கு கூறினேன்.

அதேவேளையில், நமது கட்சி உட்பட ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய சமவுடைமைக் கட்சி, நவசமசமாஜக் கட்சி ஆகிய பல்வேறு எதிர்க்கட்சிகள் பங்குகொண்டுள்ள எதிரணி கூட்டமைப்பில், தமது கட்சியையும் இணைத்துக் கொள்ளுமாறு நான் சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுத்துள்ளேன்.

எதிரணியின் குறைந்தபட்ச பொது வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் கட்சிகளை இணைத்துக் கொள்வது என்ற நிலைப்பாட்டை எதிரணி கூட்டமைப்பின் செயற்குழு கூட்டத்தில் நாம் ஏற்கெனவே விடுத்துள்ளோம்.

ஆளுகின்ற இந்த அரசாங்கத்தை தனி ஒரு கட்சியினால் வீழ்த்த முடியாது என்ற நிலைப்பாட்டில் நமது கட்சி உள்ளது. இந்த அரசாங்கம் வீழ்த்தப்பட வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

இதற்காக அனைத்து எதிர்க்கட்சிகளும், சமூக அமைப்புக்களும் ஒன்று சேர வேண்டும். இன்று ஆளுகின்ற அரசாங்கத்தில் இருக்கின்ற கட்சிகளும் உரிய காலத்தில் எம்முடன் இணையக்கூடிய அரசியல் சூழலை நாம் ஏற்படுத்து வேண்டும்.

சரத் பென்சேகாவுடன் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இணைந்து செயல்படுவது பற்றி நாம் கருத்து தெரிவிக்க முடியாது. அது ஐ.தே.கவின் உள்விவகாரம்.

இதை அந்த கட்சி சுமுகமாக தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், ஐ.தே.கவின் உள்விவகாரம் அரசாங்கத்தை வீழ்த்தும் முயற்சிகளுக்கு தடையாக இருக்கக் கூடாது எனவும் நாம் விரும்புகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-1)

## திருநெல்வேலியில்...

காலை 9.15 மணியளவில் மீண்டும் அங்கு சென்ற இராணுவம், காவல் கடமையில் ஈடுபட்டிருந்தவரை காணியை விட்டு வெளியேறுமாறு கூறியதோடு காணியின் கேற்றுக்குள் யாரும் உள்நுழையாதவாறு பூட்டுப்பூட்டி 4 இராணுவத்தினரை காணியினைச் சுற்றி பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தியுள்ளது.

இச் சம்பவத்தினை அறிந்த நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் குறித்த இடத்திற்குச் சென்றபோது இராணுவத்தினரால் காணிக்குள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.

இதுதொடர்பில் தவிசாளர் தெரிவிக்கையில் குறித்த காணி யாழ்.அபிவிருத்தி சபையினரால் நல்லூர் பிரதேச சபைக்கு 2003 -ம் ஆண்டு வழங்கப்பட்டது.

அதன்பின்னர் குறித்த காணியில் சிறுவர் பூங்கா அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் குறித்த காணியை இராணுவம் உரிமை கோரியிருந்தது.

நேற்றைய தினம் குறித்த காணிக்குச் சென்றிருந்தபோது அங்கிருந்த இராணுவத்தினர், இது ஊரெழு மற்றும் திருநெல்வேலி படைமுகாம் அதிகாரிகளின் கட்டளை எனக் கூறி எம்மைத் திருப்பி அனுப்பியிருந்தனர்.

இதுதொடர்பில் நாம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றபோது முறைப்பாடு செய்ய முடியாது என்றும் யாழ்.அரச அதிபரின் அனுமதியுடனேயே இராணுவத்தினர் குறித்த காணியை சுவீகரித்துள்ளதாக இராணுவம் தம்மிடம் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாம் இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கு தெரிவித்துள்ளோம். அவர் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்கவிடம் கதைப்பதாகக் கூறியுள்ளார்.

மேலும் இப்பிரச்சினை தொடர்பில் அரச அதிபருக்கும் மகஜர் ஒன்று கையளித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

## யாழில் பாக். வேவு...

பிடிபட்ட தமீம் அன்சாரியும் இதே தகவல்களையே தமிழக பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார்.

மேலும் இந்தியாவின் கிழக்கு கடற்கரையோர கடற்படைத் தளமான விசாகப்பட்டினத்தை வேவு பார்க்கும் வகையில் இலங்கையின் யாழ்ப்பாணப் பகுதியில் வேவு தளம் ஒன்றை பாகிஸ்தான் அமைத்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகின.

இதனால் கடும் அதிருப்தி அடைந்திருக்கும் இந்திய அரசு, அண்மையில் இலங்கை அரசுடன் இது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியிருக்கிறது. மேலும் இந்திய உயர்நிலைக் குழு ஒன்றை இலங்கை சென்று அரசுடன் இது தொடர்பாக விரிவாக விவாதிப்பதுடன் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் சந்தேகத்திற்குரிய இடங்களைப் பார்வையிடவும் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இது உண்மையானால் இலங்கையை மையமாக வைத்து இந்தியா பாகிஸ்தான் இடையேயான மோதல் விஸ்பரூபமெடுத்து விடும் என அரசியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். (ந-11)

## பல்கலை தொடர்...

கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றையதினம் இந்தப் பேச்சுவார்த் தை நடைபெறுவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டபோதும் அமைச்சர்களின் தீர்மானத்திற்கமைய இன்றை தினம் இப்பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக உயர் கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக நேற்றும் உள்ளக மட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-11)

## தாக்குதல் குறித்து...

இது தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனிடம் முறையிட்டுள்ளதாக பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலய பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஆர்ப்பாட்டம் நடத்துவது இலங்கையர்களின் உரிமையாகும். எனினும் உயர்ஸ்தானிகராலயம் மீது தாக்குதல் நடத்தியமையை ஏற்றுக்கொள்ள முடியாது என பேச்சாளர் குறிப்பிட்டார்.

தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் மொஹமட் சபியூர் ரஹ்மானை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நேற்றுச் சந்தித்து முறையிட்டுள்ளதாக உயர்ஸ்தானிகராலய பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ந-11)

## மூதூர் கொலை...

செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிராக இதுவரையில் சட்டநடவடிக் கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-11)


**காணி விற்பனை**

கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை அருகாமையில் 12 பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:**
**0778736996**
தரகர் இல்லை

(576)



**கணக்கீடு பிரத்தியேக வகுப்பு**

AAT மாணவர்களுக்கான புதிய பிரிவு ஆரம்பம்

English Medium - 7.00 AM
Tamil Medium - 4.00 PM ] 06/10/2012

T.Sutharsan - BBA
Nachchimar kovilady, Jaffna.
T.P.:750710252, 0774525213

(581)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.